[illegible]

V 4 NO:45 12 NOV 1931

JL
9m 211, N28KN
N31:4:45
188943

1434

KALANILAYAM

தனிப்பிரதி ரு. 0 3 0

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

18 DEC 31

வருஷ சந்தா
உள் நாடு ரு. 7 8 0
புற நாடு ரு. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ நவம்பர் ௴ 12உ [No. 45

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 881
2. சூளாமணி - (துறவி சருக்கம் 11—19) K. இராமரத்னம்ஐயர் B.A. 883
3. களவியற் காரிகை S. வையாபுரிப்பிள்ளை B.A. B.L. 885
4. சிதம்பரதேவர் சரிதம். Dr. V. S. அருணாசலம்பிள்ளை 888
5. நவராத்திரி—(ஓர் நாடகம்) K. N. சுந்தரேசன் B.A. (Hons) 889
6. கம்பராமாயணம் (குகப் படலம்) T. N. சேஷாசலம் B.A. B.L. 892
7. கந்தபுராணமும் சங்கநூல்களும் பண்டிதர் S. R. திம்மப்பா ஐயர் 895
8. ஆண்டாள்—(மதமும் சித்தாந்தமும்) E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 897
9. யாப்பிலக்கணம் (கொச்சகக் கலிப்பா) 898
10. வர்த்தமானம். 899
11. மதிப்புரை—காதம்பரி 899

## கலாநிலயம்

### நல்லாள் நகை. 2.

18948

துய்ப்போம் என்னும் எண்ணத்தில் தலைநின்றார் வாழ்க்கையெல்லாம் கைத்துக்கைத்து எய்ப்பதே கடனுவதை அறிந்தவர் மிகச்சிலர். ஆதலின் துய்ப்ப தற்கென்றவர் கால்கிளர்ந்தோடி இவ்வுலகினை முற்றி னும் கட்டழிக்காமல் காப்பது எளியதன்று. எனி னும் துய்க்கும்பொருட்டுத் தொடர்கின்ற பண்டங் களை அப்பண்டங்களாகவே கைக்கொண்டுஆள்வதால் அந்த அவாவினால் விளையும் கேட்டிற்கும் எல்லை ஒரு வாறு அமையலாம் என்பதைச் சென்றவாரம் விளக் கிச் சிறிதுகாட்டினோம். அவ் வெல்லையையும் அழித் தொழிக்கும் ஊழித்தீ இந்தப் பணம்.

வேண்டிய பண்டங்களை வேண்டியபோது வாங்கிக் கொள்வதற்கு ஏற்றதோர் குறியுடைய கருவியாகிய இந்தப் பணத்தின் தன்மையை ஆழ்ந்துபார்க்கவேண் டும்.பணத்தைப் பணமாகவே ஒருபோதுந்துய்க்கமுடி யாது ; அதனை ஒரு பண்டமாக மாற்றியேனும் கூலி யாகக் கொடுத்தேனுந்தான் உபயோகப்படுத்திக்கொள் ளக்கூடும். எனின், பண்டங்களும் பணமாக மாற்றிக் கொள்ளக்கூடியவைகள் ஆகின்றன. ஆதலின் மாந்த ராயினோர் என்செய்வார். தாம் துய்த்து எஞ்சிய பொருள்களை, அவை அழியுமாதலின், இனி வைத் திருந்து பயனில்லை என்னும் எண்ணத்தினாலேனும் மற்றவர்க்குக் கொடுத்துவிடும் நினைவுபோக்கி, அப் பொருள்களைப் பணமாக மாற்றிச் சேர்த்துக்கொள் ளத்தானே சிந்திப்பார். எனின் இப்பொழுது, ஒரு வனுக்குப் பண்டங்கள் எத்துணை மிகுதியாக இருந் தாலும், அத்துணையும் பணமாக மாற்றிப்பின் னப் பணத்தைப் பல்வேறு பண்டங்களாகமாற்றித் தானே பல்வேறுவகைகளில் துய்த்துவிடலாம் எனுந்துணிவு அவன்பால் நிலைபெற்றதாகின்றது. எனின், எஞ்சிய பொருளையும் கொடுப்பதின்றிக் காக்கவேண்டும் என் னும் புல்லியகருத்து இதனால்தான் அவாவிய பயனைப் பெற்றதுமாகின்றது.

இவைகளினின்று, பணமானது மனிதனது அவா விற்கே அடையாளமாவது புலப்படும். அவனுடைய சுயநயக்கயமை வீண்போகாவண்ணம் காத்துத் தரு கின்ற கருவியும் அது. பணத்தினாலல்லது மனிதன் முயல்கின்றஅளவு கொடையை மறுத்தலும் கரவு செய்தலும் இயலாது. எனின் பண்டத்திற்குப் பதி லாய்ப் பணம் நடமாடத் தலைப்பட்டதும் அதற்கு மறுதலையாகிய கரவுங் களவும் நடமாடத்தலைப்படு கின்றன. கரவென்னும் பேயின் வயிற்றிற் பிறந்தது பணம். ஆயினும் பிறந்த இப்பிள்ளை மீண்டுந் தன் தாயினை வளர்த்துக் கொழுக்கவைக்கின்றது. இவ் வண்ணங் கொழுத்துத் திரிகின்ற இக்கரவு, பொறை யறிவு துறவு ஈகையாதிய நற்குணங்களை யெல்லாம் சின்னபின்னமாய்ப்பிய்த்தெறிந்து திரிகின்ற அக்கண் ணோட்டமில்லாக் கோலத்தையே செல்வம்மிகுந்த நாகரிக நாடுகளென்று கருதியழைக்க இக்காலம் மாந் தர் கற்பிக்கப்படுகின்றனர். யோசிக்கும் வேளையில் இவ்வுலக வியாபாரங்களெல்லாம் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடிகின்ற உண்மையை மறக்கவைக் கின்றது இப்பணம். உண்பது நாழியும் உடுப்பது நான்கு முழுமுமேயாக எண்பதுகோடி நினைந்தெண்ணி நெஞ்சம் புண்ணாகச் செய்வதும் பணமே. பணத்தின் போக்குவரவில்லாமல் வாழமாட்டாதவோர் நிலையை எய்தியதும் அந்நாடு பாழாகத் தலைப்பட்டுவிட்டது என்னலாம். நரகத்திற் காள்சேர்க்க இவ்வுலகில் வந் துலவும் தூதுக்களே நாணயங்கள். மன்னவன் தலை அதன்மேல் பொறிக்கப்பட்டிருப்பது மிகவும் பரிதற்

குரியது. இரும்பைப் பொன்னும் வெள்ளியுமாக்கும் இரசவாதத்தைப் பற்றிப் பலவாறு கேட்டிருக்கின்றோம். நாணயரூபமாய் வெள்ளியும் பொன்னும்கையிற் பட்டமாத்திரத்தில் இதயத்தை இரும்பாக்கும் மறுதலை இரசவாதம் இதுவென்றாற் பிழையாமோ.

செல்வத்தைத்தான் நாமிங்கு இவ்வாறு பழிக்கின்றோம் என்று எண்ணவேண்டா. செல்வம் பொருள் அனைய சொற்கள் தற்காலம் நாணயங்களைக்குறிக்கும்படி வழங்கப்படுகின்றனவெனினும், அவை மனிதர் அடைதற்குரிய நன்மையையே உண்மையில் தெரிவிப்பனவன்றிப் 'பணம்' என்ற சொல்லின் பரியாயங்களல்ல. புத்திரசெல்வம் அருட்செல்வம் கல்விச்செல்வம் முத்திச்செல்வம், பொருளுரை மெய்ப்பொருள் போன்ற சொற்றொடர்களால் இவ்வுண்மையை உணரலாம். அஃதேபோல், உண்டுடுத் தணிந்து வாழ்க்கைக்கு வனப்பும் ஒருசால் இன்பமும் தருவனவும் பொருள் அல்லது செல்வம் என்னுஞ் சொல்லினுள் அடங்கும். இவைகளையெல்லாம் துறந்தாலன்றி நல்வாழ்வு நிறைவடையாதென்னுங் கொள்கையை நாமிங்கு வற்புறுத்த நினைத்திலம். "அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு" எனவும், "அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்தபொருள்" எனவும் விளம்புகின்ற மொழிகள் என்றும் பொய்யாத நெறியுடையவைகளே. "சாதலி னின்னாத தில்லை, இனிததூஉம் ஈதல் இயையாக்கடை" என்றபடி பொருளின்றி அருளுடைத்தாதல் மிகக் கொடிது. அருளிருந்தும் கொடுத்தற்குப் பொருளின்மையால் மறுக்க நேருமாயின் இதனால் கைத்துக் கைத்துக் காய்த்த நெஞ்சு கல்லாகிப்போதலுங் கூடும். "அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியா லுண்டு" என்ற அவ்வான்றோர் அநுபவம்முதிர்ந்தவாக்கு ஆயிரங்கோடிபெறும். ஆதலான், ஈகையை இயல்வதாக்குந் தன்மையில் பொருள்கள் போற்றத் தகுந்தனவே. இந்த நிலையில்நின்று இப் பயனைக் கருதி நோக்குங்கால் பணமோ (money) பொருளன்று. பொருளினின்று அருளையெல்லாம் பிழிந்தகற்றியபின் கிடக்குந் திப்பியே பணம். நம்மருட்குப் பிறரையும் திருவருட்கு நம்மையும் அபலாக்கிவைக்கின்ற அந்தகாரமே இப் பாழும் பணம்.

பண்டத்தைப் பணமாக மாற்றி வைத்துக்கொள்ளக்கூடிய நாணய முறைகள் நிறுவப்பெற்றவுடன் நாடுகள் கெட்டழியத் தலைப்படுகின்றனவென்று சற்றுமுன் கூறினோம். அதற்குக்காரணமும் காட்டப்பெற்றிருக்கின்றது. மனிதருடைய குணக்கேடன்றி எந்த நாட்டிற்குங் கேடென்ப தொன்றில்லை. பேய்க்குணங்களைப் பெருக்கிக்கொள்வதற்குப் பணமே கைவந்த கருவியாகின்றது. நாணயமுறைகளில்லையானால் இலஞ்சம் வஞ்சனை களவு உலோபம் முதலியவைகளுக்கு இத்துணை இடமும் அவசியமுமில்லையே. தான் துய்ப்பதற்கு வேண்டிய அளவிற்குமேல் ஒருவன் பண்டங்களைஈட்டவேனும், போற்றவேனும் நோக்கங்கொண்டிருக்கவேண்டாமைக்கு இதன்முன்னர் காரணம்உரைத்திருக்கின்றோம். தானியமுதலிய பண்டங்களாக எத்துணை இலஞ்சங் கொடுப்பது, எத்துணை வாங்குவது; களவும் அப்படியே. மன்[illegible] யவனுயினும் இழைப்பொருள் [illegible] னால் இறுக்க இயலும். இயன்றாலும் வேண்டியதற்குப் பன்மடங்கு மேற்படப் பண்டங்களைக் கவர்ந்து குவிப்பதால் எய்தும்பயன் என்ன? கரந்துவைப்பதாலும் பயனில்லை. ஆதலால் தாம்தாம் அவ்வப்போது துய்க்கக்கூடிய அளவோடு, அத்துய்க்கப்படு பண்டங்களை ஈட்டுகின்றதீயநெறிகளுந் தடைப்பட்டுநிற்கவேண்டும். பண்டங்களைப் பண்டங்களாக வைத்திருக்கின்றவரையில் மனிதர் அப்பண்டங்களைப் பெரும்பாலும் ஆள்கின்றவராவார். மற்று, பண்டங்களைவிற்றுப் பணமாக மாற்றியவுடன் அப்பணந்தான் மனிதரை ஆளத் தலைப்பட்டுவிடும் என்பதற் கையமேயில்லை.

நாகரிகம் என்ற சொல்லிற்குக் கண்ணோட்டம் என்பது பொருள். கண்ணோட்டத்தைக் கொன்று தின்று கொக்கரிக்குங் கொடுங் கூற்றுவன் இப்பணமாதலின் 'பணமுடைய நாகரிகம்' என்னுந் தொடர் பொருந்தாத இரண்டுசொற்களைப் புணர்த்தப்புகும் பான்மையதாகும். அருள்தானே வாழ்க்கையின் உயிர்நிலையாதலால், அந்த அருள் சிதைந்தபின் வாழ்க்கையெல்லாம் அவலச் சவமாவதை அறையவேண்டுமோ. பணத்தின் வெறியாட்டத்தால் தலையும் உயிரும் இழந்து மேனாடுகளில் துணங்கைகொட்டிக் கூத்தாடுங் கவந்தங்களைக் கண்டு அது களியாட்டம் எனக்கருதும் அறிவில்லாமாக்களை என்னசெய்வதென்று எமக்குத் தெரியவில்லை. இன்னார் மதியீனத்தைத் தெரியக்காட்டும் செய்தி இன்னு மொன்றுளது. மேனாட்டுப் பொருளாதாய வகைகளையும் நாணய முறைகளையும் முன்னேற்றத்திற் கடையாளங்களாகக் காட்டிக் காட்டி, இங்கிந்நாட்டில் இல்லையே என்று கைபிசைபவர்களிற் பலர், 'நந்தம் பண்டைத் தமிழ் நாகரிகம்' என்றென்று பலபடி பாராட்டிப் பேசக் கேட்கின்றோம். சிந்தனை சிறிதேனு மிருக்குமாயின் இப்படிச் செய்யார். நந்தம் பண்டைத் தமிழர்நாகரிகத்தில் பணநடமாட்டத்திற்கு இடமிருந்ததாகத் தெரியவில்லை. 'பணம்' என்பது இலக்கியம் மருவிய சொல்லன்று. இதற்கோர் நேர் தமிழ்ப்பதம் இல்லாமையே அந்நாகரிகத்தில் பணம் பயிலப்பெற்றதில்லை யென்பதற்குத் தக்க சான்றாகும். இப் பணம்புகுந்து பயிலாமையாற்றான் அந்நாகரிகத்தின் பெருமையும் நலங்களும் நிலைத்தனவாயின. அதனை மறந்தபின் ஆயிரங் கூறிக்கூறி அலசுவதால் ஆவதொன்றுமில்லை.

பணந்தான் இல்லாக்கால் பின் வர்த்தகங்கள் வளர்வதற்கு வழியேதுஎன்று ஒருவருக்கும் துணுக்கமும் நகையுந்தோன்றவேண்டா. வர்த்தக வசதிகள் இல்லாமற்போகலாம் உண்மை. எனினும் அதனால் அனர்த்தம் ஒன்றும் நேர்ந்திடாது. வர்த்தகம்இல்லாத வாழ்க்கையே வழுத்தற் குரியது. வாழ்நாளைப் பாழாக்க வல்லது இவ் வர்த்தகவளர்ச்சி வந்ததில்லை. இவ்வாசகம் இக்காலமக்களுக்குப் பொய்போலத் தோன்றுவது இயற்கையேயேனும் எக்காலத்திலும் இதுமெய்யே. வியக்கவேண்டா. வியந்தாலும் பொய்யென்றெண்ணவேண்டா. மெய்ம்மையும் ஒவ்வொருபோது பொய்யைவிட வியத்தற்குரியதாய் அமைந்துவிடுகின்றது. குண்டூசிமுதல் மோடார்கார் வரையில் வழங்கும் வர்த்தகப்பொருள்களெல்லாம்வீணனவை. இயற்கைவாழ்க்கையில் வைகியமனிதருக்கு இப்பொழுதுவர்த்தகம் [illegible]ப்படுகின்றபொருளொன்றும் அவசியமேஇல்லை [illegible] உணர்ந்துகொள்வ தெளியதன்றெனினும்



அறிவுடையோர் சிந்தனைக்கு அது எட்டாததுமன்று. செயற்கை வாழ்க்கையிலோ சுகம்சற்றேனுமில்லை. பணமே சக்தியும் சுகமுமென்று வர்த்தகவளத்தை வளர்த்துக்கொண்டதேசங்களெல்லாம், வாய்விட்டு விளம்பாவிடினும், இன்று கையற்றுநிற்கும் நிலையிலிருந்து அது தெரியவில்லையா? மனிதருக்கு வேண்டுவன வெல்லாம் என்ன? உயிர்க்கக் காற்றும், பருகப்புனலும், உண்ண உணவும், உடுக்க ஆடையும், காக்க அரசனும், உய்யக் கலைகளும், வணங்குதற்கோர் கடவுளும் அன்றி வேண்டுவன வேறில. இவைகளில், கடவுளையோ வாங்கவும் விற்கவும் இயலாது. அரசனை வஞ்சனையால் விற்றுவிடலாம், வாங்க முடியாது—அடிமைகளைத்தான் வாங்கலாம். இக்காலம், சுதந்தரம் பொதுஜன ஆட்சி அனைய வீண்பேர்களை வைத்து, அரசனைவிற்று அடிமைகளை வாங்கக் காண்கின்றோம். பரத்தைமையுட்படுத்தினாலன்றி உண்மைக்கலைகளுக்குவிலையில்லை. உணவும் ஆடையும் வாழ்வாங்கு வாழும் தேயத்தில் வர்த்தகமின்றியே வாய்க்கப்பெறும். பட்டினங்களில், வாங்குகின்ற குழாய்நீரும் அழுக்குநீர், மின்சார விசிரிக்காற்றும் அழுக்குக் காற்று. ஆதலின், இயற்கையோடியைந்த ஆன்ம வாழ்க்கைக்கு இன்றியமையாதன வனைத்தும் வர்த்தகச் "சரக்குகளில்" சேராமல் அயலாகின்ற இரகசியத்தின் உண்மை, ஆய்ந்தோய்ந்து பார்க்கவல்ல அறிவும் பயிற்சியும் உடையவர்க்குப் புலப்படாது போகாது. ஆதலின் வர்த்தகம் வீழ்வதால் நலமொழியத் தீதில்லை. அவ்வர்த்தகத்திற் கடிப்படையாகிய பணநடமாட்டத்தைப்பயமின்றிமறுத்துவிடலாமே.

தோலாமொழித்தேவர் இயற்றிய

# சூளாமணி

[874-வதுபக்கத் தொடர்ச்சி]

6. தூதுவிடு சருக்கம்.

(வேறு)

441

மினற்கொடி விலங்கிய விலங்கன்மிசை வாழும்
புனற்கொடி மலர்த்தொகை புதைத்தபொலி தாரோய்
நினக்கென வியற்றிய நிலாநிழன் மணிக்கல்
மனக்கினிதி னேறினை மகிழ்ந்திருமி னென்றான். 11.

மின்னல்கொடி விலங்கிய விலங்கல் மிசை-மின்னற்கொடிகள் விலகிச்செல்லும் மலையின்மேல் வாழும், புனல் கொடிமலர் தொகை புதைத்த பொலி தாரோய்-நீர்க்கொடிகளின் மலர்க்கூட்டங்கள் நெருங்கத் தொடுத்த அழகிய மாலையை அணிந்தவனே, நினக்குஎன இயற்றிய - உனக்காக அமைத்த, நிலா நிழல் மணிக்கல் மனக்கு இனிதின் - நிலாப்போன்ற ஒளியோடு கூடிய இந்த மனதுக்கு ரமணீயமான பளிங்குக் கல்லின்மீது, மகிழ்ந்து இருமின் - மகிழ்ந்து நீ இருப்பாயாக, என்றான் - என்று வேண்டினான்.

442

அழற்கதி ரியங்கற வலங்கிண ரசோகம்
நிழற்கதிர் மரத்தகை யதாகநினை கில்லேன்
பொழிற்கடவுள் பொன்னிடமி தென்னைபுகு மாறென்
றெழிற்கதிர் விசும்பிடை யிழிந்தவன் மொழிந்தான்.

எழில் கதிர் விசும்பு இடை இழிந்தவன் - அழகிய சூரிய சந்திரர்கள் சஞ்சரிக்கும் ஆகாயத்தின் வழியாக வந்திறங்கிய மருசி, அழல் கதிர் இயங்கு அற அலங்கு இணர் அசோகம் - சூரியன் நேராகச் செல்லுதல் தவிரும்படி ஒளிரும் பூங்கொத்துக்களையுடைய இந்த அசோகமரம், நிழல்கதிர் மரம் தகையது ஆக - நிழலைத்தரும் ஒரு சாமானிய மரத்தின் தன்மையது என்று, நினைகில்லேன் - நான் நினைக்கக்கூடவில்லை. பொழில் கடவுள் பொன் இடம் இது - இந்த வன தெய்வம் வாழும் சிறந்த இடம் இது; என்னை புகும் ஆறு - இதனுட்புகுந்து நான் எவ்வாறு இருத்தல் கூடும், என்று மொழிந்தான் - என்று மறுமொழி அளித்தான்.

அலங்குதல் - ஒளிசெய்தல். கதிர் - ஆகுபெயர்.

443

நிலாவளர் நிழற்கதிர் நிமிர்ந்தொளி துளும்பும்
சிலாதல மிதற்குரிய தெய்வமெனல் வேண்டா
அலாதவ ரிதற்குரிய ரல்லரவ ராவிர்
உலாவிய கழற்றகையி னீரென வுரைத்தான். 13.

நிலாவளர் நிழல்கதிர் சிலாதலம் இதற்கு உரிய - சந்திரனிடத்தில் தோன்றி வளர்கின்ற ஒளியையொத்த காந்தியை வீசும் இந்தப் பளிங்காசனத்தில் இருப்பதற்குரியவர், நிமிர்ந்து ஒளி துளும்பும் தெய்வம்-உடலினின்று எழுந்து ஒளியெங்கும் பரவும் தெய்வங்கள்தாம்; அல்லாதவர் இதற்குரியர் அல்லர்-தெய்வங்களையன்றிப் பிறர் இதன்மீது இருத்தற்கு உரியர் அல்லர், எனல் வேண்டா - என்று நீர் கருத வேண்டாம். உலாவிய கழல் தகையின் நீர் அவர் ஆவிர் - (அழகு) பரந்த வீரக்கழலை அணிந்த பெருந்தகையாகிய நீர் இதின்மீதிருக்கத் தகுந்தவர் ஆவீர், என உரைத்தான் - என்று சொன்னான்.

'நிலாவளர்......துளும்பும்' என்னும் இத்தொடர் முழுதையும் சிலாதலம் என்பதற்கே அடையாக்கலும் ஒன்று. 'அவர்' என்பது இதற்குரியர், என்பதைச் சுட்டி நின்றது.

444

என்ன விது வந்தவகை என்னினிது கேண்மின்
நன்னக ரிதற்கிறைவன் முன்னநனி நண்ணித்
தன்னிக ரிகந்ததவன் அங்கத னெனும்பேர்
பொன்னவிரு நூல்கெழு புரோகிதன் உரைத்தான் 14.

இது வந்தவகை என்ன என்னின் - இங்கே இது அமைத்துவைக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் என்ன என்று கேட்பீராயின், இது கேண்மின்-நான் சொல்வதைக் கேண்மின்; தன் நிகர் இகந்த தவன் - தனக்குச் சமானமில்லாத தவத்தோனும், பொன் அவிரு நூல்கெழு அங்கதன் என்னும் பேர் புரோகிதன்- அழகு வாய்ந்த நிமித்தநூலை நன்று உணர்ந்த அங்கதன் என்னும் பேரினை உடையவனுமான புரோகிதன், நல் நகர் இதற்கு இறைவன் முன்னம் நனி நண்ணி - இந்த நல்ல நகரத்தை ஆளும் மன்னன்

முன்பு அணுகி, உரைத்தான் - பின் வருமாறு சொன்னான்.

445

மின்னவிர் விளங்குசுடர் விஞ்சையுல காளும்
வின்னவிற டக்கைவிறல் வேலொருவன் வேண்டி
மன்னநின் மகற்கொரு மகட்கரும முன்னி
இன்னவ னினைப்பகலு ளீண்டிழியு மென்றான். 15.

மன்ன - அரசனே, நின் மகன்கு - உனது மகனுக்கு, ஒரு மகள் கருமம் உன்னி - தனது ஒப்பற்ற மகளை மணஞ்செய்து கொடுக்கும்காரியத்தைஎண்ணி, மின் அவிர் விளங்குசுடர் விஞ்சை உலகு ஆளும் வில் நவில் தடக்கைவிறல்வேல் ஒருவன்-மின்னலைப் போல ஒளிரும் நல்ல காந்தியோடுகூடிய வித்தியாதர உலகத்தை ஆளும் வில்லைப் பிடித்துப் பழகும் விசாலமான கையில் வெற்றிவேலை ஏந்திய ஒரு மன்னன், வேண்டி - தன்னை வேண்ட, இன்னவன் இனைப்பகலுள் ஈண்டு இழியும் - இப்படிப்பட்ட ஒருவன் இன்றைத் தினத்துக்குள் இங்கே ஆகாயத்திலிருந்து இறங்கி வருவான், என்றான் - என்று சொன்னான்.

நவில்தல் - பழகுதல், பயிலுதல்.

446.

மடங்கலை யடுந்திற னெடுந்தகைதன் மாறாய்
அடங்கல ரடங்கவடு மாழியஃ தாள்வான்
உடங்கவ னுடன்றெரி தெளுப்பவரும் வந்தால்
நடந்தவ னடுங்கவடு நம்பியிவனென்றான். 16.

மடங்கலை அடும்திறல் நெடுந்தகை - சிங்கத்தைக் கொல்லும் வலிமை பொருந்திய பெரியோனும், தன் மாறு ஆய்-தனக்குப் பகைவராய், அடங்கலர் - தனக்குக் கீழ்ப்படிந்து வாழாதவர்களை, அடும் ஆழி அஃது ஆள்வான் - கொல்லும் சக்கரத்தைக் கையாள வல்லவனாகிய அச்சுவகண்டன், உடக்கு அவன்-(சிங்கமாகச் சமைத்து முன்) செலுத்தப்பட்ட அரிகேது என்னும் விஞ்சையன், உடன்று எரி தெளும்ப வரும் - சினந்து நெருப்புச் சிந்த வருவான், வந்தால்-அவ்வாறு வரும்போது, நம்பி இவன் - உனது மகனாகிய திவிட்டன், அவன் நடுங்க நடந்து அடும் - சிங்கவேடந்தரித்து வந்த அவ்விஞ்சையன் அஞ்சிநடுங்கும்படி எதிர்சென்று பொருது அவனைக்கொல்லுவான், என்றான் - என்றும் புரோகிதனாகிய அங்கதன் எங்கள் அரசனுக்குச் சொன்னான்.

உடக்கு என்பது எதுகை நோக்கி 'உடங்கு' என்று மெலிந்தது. உடக்குதல் - வில்லினின்று அம்பை எய்தல்; இங்கே பொதுவாக 'முன்னே செலுத்தல்' என்னும் பொருள்தந்துநின்றது. அரிகேதுவைச் சிங்கமாக்கி விடுத்ததை மேற் சீயவதைச்சருக்கம், 124-கவியால் அறிக.

447

ஆங்கவன் மொழிந்தபின் அடங்கலரை யட்டான்
தேங்கமழ் பொழிற்றிகழ் சிலாதலமி தாக்கி
ஈங்கவ னிழிந்தபின் எழுந்தெதிர்கொ ளென்ன
நீங்கலெ னிருந்தனென் நெடுந்தகை யிதென்றான். 17.

நெடுந்தகை-பெரியோய், ஆங்கு அவன் மொழிந்தபின் - அவ்வாறு புரோகிதன் சொல்ல அதன் பிறகு, அடங்கலரை அட்டான்-பகைவரை அழித்தவனாகிய எம்மரசன், தேன் கமழ் பொழில் சிலாதலம் இது ஆக்கி - தேன்மணங் கமழும் இந்தச் சோலையின்கண் இந்தப் பளிங்காசனத்தை அமைவித்து, ஈங்கு அவன் இழிந்தபின்எழுந்துஎதிர்கொள் என்ன-இவ்விடத்தே அந்தச்சலனசடி மன்னன் தூதன் வந்து இறங்கியதும் நீ எழுந்துசென்று அவனை எதிர்கொள் என்று எனக்குப் பணிக்க, நீங்கலென் இருந்தனென்-நானும் அவ்வாறே இவ்விடத்தை விட்டகலாது இங்கேயே தங்கி இருந்தேன், இது என்றான் - இதுவே இங்கு இச்சிலாதலம் இருப்பதற்கும் நானிருந்து உன்னை எதிர்கொண்டதற்கும் காரணம் என்றான்.

448

என்றவன் மொழிந்தபி னிருந்தன னிருப்பச்
சென்றவன் வழிச்சிரமை தீர்மினென நால்வர்
பொன்றவழ் பொருந்திழை அணங்கினனை யாரை
மின்றவழ் விளங்குகொடி வேந்தனும் விடுத்தான். 18.

என்று அவன் மொழிந்தபின் இருந்தனன் - என்று அவன் சொன்னதின்பின் மருசி அந்தச்சிலாதலத்தில் இருந்தான். இருப்ப - அவ்வாறிருப்ப, மின் தவழ் விளங்கு கொடி வேந்தனும் - மின்னல் தவழ்வதைப் போல விளங்கும் கொடியை ஏந்திய அரசன், பொன் தவழ் பொருந்து இழை அணங்கின் அனையார் நால்வரை - பொன்னாற் செய்யப்பட்ட காந்தியோடுகூடிய நல்ல அணிகளை அணிந்த தெய்வமகளிருக்கொப்பான மங்கையர் நால்வரை, 'சென்று அவன் வழிசிரமை தீர்மின்' என விடுத்தான் - 'நீர் சென்று தூதாக வந்தவனுடைய வழிப்பிரயாணத்தாலுண்டான களைப்பை ஆற்றியிடுங்கள்' என்று சொல்லி அனுப்பினான்.

சிரமை - 'சிரம' என்னும் வடமொழியின் தற்பவம்.

449

பொன்னவிர் மணிக்கலை சிலம்பொடு புலம்ப
மின்னவிர் மணிக்குழை மிளிர்ந்தொளி தளும்பச்
சின்னமலர் துன்னுகுழல் தேறலொடு சோர
அன்னமென வல்லவென அன்னண நடந்தார். 19.

(அவர்களும்), பொன் அவிர் மணிகலை சிலம்பொடு புலம்ப-பொன்னாற்செய்துவிளங்கும் மணிகள் கோத்த மேகலாபரணம் சிலம்புடன் ஒலிக்கவும், மின் அவிர் மணி குழை மிளர்ந்து ஒளி தளும்ப-மின்னலைப்போல் விளங்கும் ரத்னக்குழைகள் (காதில்) பொலிந்து ஒளியை வீசவும், சின்னம் மலர் துன்னுகுழல் தேறலொடு சோர - மங்கலக்குறியாகச்சூடும் விடிபூக்கள் செறிந்த கூந்தல் தேனுடன் சரிந்து வீழவும், ' அன்னம் என அல்ல என அன்னணம் நடந்தார்-இவைகள் அன்னப் பறவையோ அல்லனவோ என்று கண்டார் ஐயுற்று மயங்கும்படிக்கும் (அழகாக) நடந்து சென்றார்கள்.

கலை - மேகலை (முதற்குறை). சின்னம் - அடையாளம், சின்னப்பூ - கண்ணியாகத் தொடுக்காமல் விடு பூவாகக் கூந்தலில் அணியும் மலர்கள்! சின்னப் பூ செருகுமென்பூச் சேகரப்போது' (கோலங்காண் படலம், 17) என்றார் கம்பநாடரும்.



# களவியற் காரிகை

[872-வது பக்கத் தொடர்ச்சி]

வாய்விடுகிளவி யென்பது இவ்வகை செல்லாநின்றகாலத்துப் பகற்குறிவக் தொழுகாநின்ற தலைமகனைக் காணும்பொழுதிற் காணும்பொழுது பெரிதாகவி னாற்றாளாகிய தலைமகள் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

ஏர்ப்பின்னை தோண்முன் மணந்தவ
னேத்த வெழிறிகழுஞ்
சீர்ப்பொன்னை வென்ற செறிகழ
லோன்றில்லைச் சூழ்பொழில்வாய்க்
கார்ப்புன்னை பொன்னவிழ் முத்த
மணலிற் கலந்தகன்றார்
தேர்ப்பின்னைச் சென்றவென் னெஞ்சமென்
கொலாமின்று செய்கின்றதே.

—திருக்கோவை - 273.

பொருமா மணிமுடிப் பூலர்தை மன்னரைப் பூவழித்த
குருமா மணிவண்ணன் கோநெடு மாறன் குமரிமுன்னீ
ருருமா மணிதிகழ் கானலின் வாய்வந் தகன்றகொண்கன்
றிருமா மணிநெடுந் தேரொடுஞ் சென்றதென் சிந்தனையே.

—பாண்டிக்கோவை,

வருவது கொல்லோ தானே வாரா
தவணுறை யேவலி னசைவது கொல்லோ
புனவர் கொல்லையிற் புகவரு மஞ்ஞை
பொன்னிணர் வேங்கை மிசைவண் டாலக்
கலையிசை யிருந்து குருவி வருத்துறப்
பரந்தாடு மகளிரிற் றோன்றுங்
குன்றுகெழு நாடனொடு சென்றவெ னெஞ்சே.

—ஐங்குறுநூறு - 295.

குறுநிலைக் குரவின் சிறுநனை நறுவீ
வண்டுதரு நாற்றம் வளிகலந் தியக்
கண்களி பெறூஉங் கவின்பெறு காலை
யெல்வளை நெகிழ்த்தோர்க் கல்ல லுறீஇச்
சென்றவெ னெஞ்சஞ் செய்வினைக் க(ா)சாவா
வொருங்குவர லசைஇ வருந்துங் கொல்லோ
அருளா ராகலி னழிந்திவண் வந்து
தொன்னல னிழந்தவென் பொன்னி[ற] னோக்கி
யேதி லாட்டி யிவளெனப்
போயின்று கொல்லோ நோ[ய்] தலை மணந்தே.

—நற்றிணை - 56.

அரும்பின் மென்கொடி துமியக் கடும்பகற்
கொடுங்கழி மருங்கின் வந்தருள்
நெடுந்தோ ளண்ணல்பின் சென்றதென் னெஞ்சே.

—பொருளியல்.

எவ்விடத் தென்செய்த தென்றறியே னிப்போதைக்
கிவ்விடத்தி லென்னுழைவந் தெய்தாதே—வெவ்வினை
இன்னலே கூர வினிதளித்தார் தேரின்பின் [யேன்
னென்னலே சென்றவென் னெஞ்சு.

—கிளவித்தெளிவு.

பொழுதினுக் கிரங்க லென்பது இவ்வகை சொல்லியாற்றாளாகிய தலைமகள் அந்திப்பொழுதுகண்டு இரங்கல். அதற்குச் செய்யுள்:—

பகலோன் கரந்தனன் காப்பவர் சேயர்பற் றற்றவர்க்குப்
புகலோன் புலியூர்க்குப் போக்கரி யோனெவ ரும்புகலத்
[னவா
தகலோன் பயிறில்லைப் பைம்பொழிற் சேக்கைகணோக்கி
நகலோங் கிருங்கழிவாய்க்கொழு மீனுண்ட வன்னங்களே.

—திருக்கோவை - 188.

வெய்யவன் போயினன் மேலைப்
புணர்ந்தவர் விட்டகன்றார்
உய்யசெஞ் செவ்வகை யொன்றையுங்
காண்ப னுலகடல்சூழ்

வையகங் காவலன் மாறன்
குமரியின் வாயிரைதேர்
நொய்யவண் டோகைவண் டானமுஞ்
சேக்கைக ணோக்கினவே.

—பாண்டிக்கோவை.

போகக் கடவன புள்ளென் றிருந்திலம் போர்த்துணை
யாகக் கடவன வென்றிருந் தேமகி லாண்டமெல்லாந்
[தொழு
தியாகக் கொடிகொண்ட கண்டன் புகாரிற்றஞ் சேக்கை
மேகத் தொடங்கின வேயந்தி வாயெம்மை யிட்டுவைத்தே.

—பழம்பாட்டு.

பொழுதுகண் டா[ய்] புகு கின்றது
போதகம் பொய்யற்கெம்மைத்
தொழுதுகொண் டாளென்று சொல்லுகண்
டாய்தொல்லை நூல்வரம்பை
முழுதுகண் டான்முனிந் தார்தம
தென்னைமுன் னிக்குறும்பிற்
பழுதுகண் டானந்தி மல்லையங்
கானற் பனிக்குருகே.

—நந்தி[க்]கலம்பகம்.

ஆய்கதிர்ச் செல்வ னத்தஞ் சேர்ந்தென
நோய்கூர் நெஞ்சி னுழைப்பப்
போயின மாதோ புள்ளினம் பிரிந்தே.

—பொருளியல்.

படருறுகிளவி யென்பது இவ்வகை சொல்லி யாற்றாளாகிய தலைமகடனது உள்ளக் கவலைகண்டு தோழிசொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

பொன்னு மணியும் பவளமும் போன்று பொலிந்திலங்கி
மின்னுஞ் சடையோன் புலியூர் விரவா தவரினுண்ணோய்
இன்னு மறிகில வாலென்னை பாவ மிருங்கழிவாய் [னே.
மன்னும் பகலே மகிழ்ந்திரை தேரும்வண் டானங்களே,

—திருக்கோவை - [illegible].

அன்னம் புரையு நடையாள்
புலம்பெய்த வத்தமன்னும்
பொன்னஞ் சிலம்பு கதிரோன்
மறை(த்)தலும் போயினவாற்
றென்னன் றிருமால் கழனெடு
மாறன் றிருந்துசெங்கோல்
மன்னன் குமரிக் கருங்கழி
மேய்ந்தவண் டானங்களே.

—பாண்டிக்கோவை.

மாலை மணந்து காலை பிரியுங்
காதல ருடையையோ கறையங்கு மதியே
யிரவே யாயி னல்லை பகலே
மெல்லியற் கொடிச்சி நுதலினும்
புல்லென் றனையா லோகோ யானே.

—பொருளியல்.

வருந்துதல் ஒத்த லென்பது நீர் வரையாதொழியின் எம்பெருமாட்டி வருந்துவள் : வரைவுணர்ந்தொழிந்து நீர் வருந்துதிர் : ஆதலா லிரண்டானும் எனக்கே மிக வருத்த முடைத்தெனத் தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

மன்னுந் திருவருந் தும்வரை யாவிடி னீர்வரைவென்
றுன்னு மதற்குத் தளர்ந்தொளி வாடுதி ரும்பரெல்லாம்
பன்னும் புகழ்ப்பர மன்பரஞ் சோதிசிற் றம்பலத்தான்
பொன்னங் கழல்வழுத் தார்புல னென்னப் புலம்புவனே.

—திருக்கோவை - 131.

வரையா விடின்மதி வாணுதல் வாடும் வரைவுரைத்தால்
விரையா டியகண்ணி வேந்தநீ வாடுதி விண்டெதிர்ந்த
நிரைதா ரரைசரை நெல்வேலி வென்ற நெடுந்தகைசீர்
உரையா தவரென யானே புலம்புத லுற்றனனே.

—பாண்டிக்கோவை.

இன்றறிந்தே னென்பது இதற்குமுன்(னல்லது)கடவுளாக வல்லது நினையேன் (எனச் சொல்லுதல்) இவளைமக்களுள் ளொருமக ளென்பது இன்றறிந்தேனெனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

மாடஞ்செய் பொன்னக ருந்நிக
நில்லையிம் மாதர்க்கென்னப்
பீடஞ்செய் தாமரை யோன்பெற்ற
பிள்ளையை யுள்ளலரைக்
கீடஞ்செய் தென்பிறப் புக்கெடத்
தில்லைநின் றோன்கயிலைக்
கூடஞ்செய் சாரற் கொடிச்சியென்
றோநின்று கூறுவதே.

—திருக்கோவை - 129.

சுடர்திரி வானிடம் போதா வகைதொல் லுலகில்வந்த
கடவுளர் தாமென யானினைந் தேனெழு காசினிகாத்
தடல்புரி தானை யரிகே சரிவட கொல்லியின்வாய்
மடமக ளாவதை யின்றறிந் தேன்மதி வாணுதலே.

—பாண்டிக்கோவை.

இதற்கொண்டியான் றெளிந்து மேனாண்
மதிக்கோடு [து]ஞ்சு மால்வரை வாழ்க்கைக்
கடவுள ராக வல்லது
மடவான் மாதரை மதித்தன் றிலமே.

—பொருளியல்.

குடித்திறங் கூறலென்பது இவ்வகை சொல்லக்கேட்ட தோழி யெமது தந்தையுந் தாயரு மலைக்கானவர் எனவெங்காவல் எனச் சொல்லுதல். அதற்குச் செய்யுள்:—

வேய்தந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கார்வரை மீன்பரப்
சேய்தந்த வானக மானுஞ் சிலம்பதன் சேவடிக்கே [பிச்
யாய்தந்த வன்புதந் தாட்கொண்ட வம்பல வன்மலையத்
தாய்தந்தை கானவ ரேனலெங் காவலித் தாழ்வரையே.

—திருக்கோவை - 130.

வானவர் நாதன் மணிமுடி மேற்பொன் வளையெறிந்த
கோனவ ணாரம் புனைந்தவன் சூழ்பொழிற் கொல்லியின்
[வாய்
எனலெங் காவலா[ம்] யாய்தந்தை யிந்தப் பெரும்புனத்
கானவ ரானது வென்னீ யுரைப்பது காவலனே. [துக்

—பாண்டிக்கோவை.

வரைதல் வேட்டனி ராதலிற் பதிவாயி
னெதிர்கோட் செவ்விய ரெமரே வலியி
னறுநதற் பெருந்தோட் பேதையுஞ்
சிறுகுடிக் கானவன் பெருமட மகளே.

—பொருளியல்.

இற்செறிவுரைத்த லென்பது இவ்வகைச் சொல்லாநின்ற காலத்துப் பகற்குறிவந் தொழுகாநின்ற தலைமகற்குக் குறிப்பினாற் றமது இற்செறி வுரைத்தல். அதற்குச் செய்யுள்:—

சுவிளை யாட நறவிளை வோர்ந்தெமர் மால்பியற்று [யலைப்
வேய்விளை யாடும்வெற் பாவுற்று நோக்கியெம் மெல்லி
போய்விளை யாடலென் றாளன்னை யம்பலத் தான்புரத்துத்
தீவிளை யாடநின் றேவிளை யாடி திருமலைக்கே.

—திருக்கோவை - 133.

நீர்வண்ண வெண்டிரை மேனின்ற
வேந்தனெல் வேலியொன்னார்
போர்வண்ணம் வாட்டிய பூழியன்
பூந்தண் குருந்தொசித்த
கார்வண்ணன் போல்வண்ணன் காவிரி
நாடன்ன காரிகையா
ளோர்வண்ண நோக்கிநின் றென்னையு
நோக்கின ளெம்மனையே.

—பாண்டிக்கோவை.

நாகைக் குலமுகில் மமமதநன பூவகைகக ணண்மலர்மேற்
றோகைக் குரியவன் சோனக் குரியவன் றுங்கவெற்பா
பாகைத் தருசொல்லி மென்முலைப் பாரமும் பார்த்திடை
[யென்
னுகைக்கிருந்ததென்றுளெம்மைநோக்கினின்றம்மனையே.

—பழம்பாட்டு.

அன்ன வாழி கெருநன் மாதர்
மென்முலை யரும்பிய வாகமு
[ெ]மன்னும் பன்முறை நோக்கினள் பெரிதே.

—பொருளியல்.

அன்னை நெருந லணியிழையாள் கொங்கையையும்
என்னையும் நோக்கி யிருவரையும்—புன்னை
வளையாடு கானல்வாய் மானனையீ ரின்று
விளையாடு மென்றாள் விரைந்து.

—கிளவித்தெளிவு.

சிறைப்புறக் கிளவியென்பது இவ்வகை குறிப்பினால் இற்செறிவுரைத்த தோழி முன்னிலைப்புற மொழியாக வேங்கைக் குரைப்பாளாய்த் தலைமகன் கேட்பச் சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

கணியார் கருத்தின்று முற்றின்
றியாஞ்சென்றுங் கார்ப்புனமே
மணியார் பொழில்காள் மறத்திர்கண்
டீர்மன்னு மம்பலத்தோன்
அணியார் கயிலை மயில்கா
ளயில்வே லொருவர்வந்தாற்
றுணியா தனதுணிந் தாரென்று
நீர்மைகள் சொல்லுமினே.

—திருக்கோவை - 135.

உலம்புரி தோண்மன்ன ரோடவல்
லத்தட் டவருரிமை
நலம்புரி கோதையர்க் கல்லல்கண்
டான்கொல்லிச் சாரனண்ணி
வலம்புரி வில்லோ டிருவிப்
புனங்கண்டு வாடிநின்றாற்
புலம்புனை சையற்க வென்னுங்கொல்
வேங்கைச் செறிபொழிலே.

—பாண்டிக்கோவை.

திரையார் குருதிப் புனல்மூழ்கச்
செந்நிலத் தன்றுவென்று
புரையார் பெரும்புகழ்ச் செங்கோ
லுசிதனெண் பூம்பொதியில்
வரையார் தினைப்புனங் கால்கொய்ய
நன்னாள் வரைந்துநின்ற
விரையார் மலரின வேங்காய்
நினக்கு விடையில்லையே.

—பாண்டிக்கோவை.

பாங்கின ராகித் திங்குதலைத் தருக
நீங்குப் பிரிவுசூழ்ந் தன்றி
யாங்கன மொழிமோ வேங்கையது நிலையே.

—பொருளியல்.

வெளிப்பட வுரைத்தலென்பதுயாம் இப்புனங்காவேம்: நீர் பலகால் வாரன்மின் னெனத் தோழி தலைமகன்முன்னின்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—



வடிவார் வயற்றில்லை யோன்மலயத்துநின் றம்வருந்தேன்
கடியார் கழிவண்டு நின்றலர் தூற்றப் பெருங்கணியார்
கொடியார் நமக்கினி நோதகயானுமக் கென்னுரைக்கேன்
றடிவார் தினையெமர் காவேம் பெருமவித் தண்புனமே.

—திருக்கோவை - 139.

செயன்மன்னு மாவது சொல்லாய் சிலம்பதென் பாழி
[வென்ற
கயன்மன்னு வெல்கொடி காவலன் மாறன் கடிமுனைமே
லயன்மன்னர் போற்கொய் துமாள்கின்ற தா[ல]ணி வானு
[ரிஞ்சும்
புயல்வளர் கோட்ட மணிவளர் சாரலெம் பூம்புனமே.

—பாண்டிக்கோவை.

ஊச றொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசந் தனையிழக்கும் வள்ளலே—தேசு
பொழிலிழக்கும் காளையே பூங்குழலி நீங்க
எழிலிழக்கு மந்தோ விவள்.

—கண்டனலங்காரம்.

பண்சிலம்ப வண்டாடும் பைந்தார்ச் சனநாதன்
வண்சிலம்பிற் கூடல் வளைந்தாலும்—தண்சிலம்ப
மான்பாயும் வேங்கையிலு மாறு தலைத்திமித்
தேன்பாயும் வேங்கை சிவந்து.

—கண்டனலங்காரம்.

கணியென வுரைத்த லென்பது வேங்கை பூத்துப் பருவமாகத் தினைகொய்யக்கண்ட தோழி தலைமகட்குச் சொல்லியது. அதற்குச் செய்யுள் வருமாறு:—

மாதிடங் கொண்டம் பலத்துநின்
றோன்வட வான்கயிலைப்
போதிடங் கொண்டுபொன் வேங்கைத்
தினைப்புனங் கொய்கவென்று
தாதிடங் கொண்டுபொன் வீசித்தன்
கள்வாய் சொரியநின்று
சோதிடங் கொண்டிதெம் மைக்கெடு
வித்தது தூமொழியே.

—திருக்கோவை - 138.

மொய்வார் மலர்முடி மன்னவர்
சாய முசிரிவென்ற
மெய்வான் விரோதையன் கொல்லியில்
வேங்கை கணிமைசொல்லச்
செய்வாய் விளைந்த செழுங்குரற்
செந்தினைப் போகமெல்லாங்
கொய்வான் றொடங்கின ரெம்மையர்
தானிரை கோல்வளையே.

—பாண்டிக்கோவை.

இயவன ராசன் கலுபதி தாமுத லெண்ணவந்தோர்
அயன்மிகு தானைய ரஞ்சவன் னத்தவ ரஞ்சலென்னுக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்து
[போம்
பயன்விளை வாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே.

—பல்சந்தமாலை.

நனைகெடச் செய்தில மென்பது வேங்கை யரும்பியகாலத்து அரும்பாகக் கொய்திலமெனத் தோழி சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

கனைகடற் செய்தநஞ் சுண்டகண் டர்க்கம் பலத்தமுதாய்
வினைகெடச் செய்தவன் விண்டோய் கயிலை மலையனையாய்
நனைகெடச் செய்தன மாயி னமைக்கெடச் செய்திடுவான்
றினைகெடச் செய்திடு மாறுமுண் டோவித் திருக்கணியே.

—திருக்கோவை—141.

நன்றுசெய் தாமல்ல நன்னுத லாய்நறை யாற்றுவெம்போர்
நின்றுசெய் தாரை வருந்த நெடுங்கைக் களிற்றுடலாற்
குன்றுசெய் தான்கொல்லி வேங்கையை மெல்லரும்
[பாகக்கொய்த
லன்றுசெய் தாமெனி னிற்பதன் றோநம் மகன்புனமே.

—பாண்டிக்கோவை.

கரும்பனைய மென்மொழியாய் கண்ணறைவாய் வேங்கை
யரும்பினைமுன் கொய்தனமே யாகிற்—பெரும்புனத்திற்
செந்தினைநன் போக்குஞ் சிதைப்பரோ சீர்சிறந்த
சந்தனவண் டோளைய[ர்] தாம்.

—பழம்பாட்டு.

ஏறுவிடுத்த லென்பது எமரு மெம்மையரும் வதுவை நோக்கித் துணிந்து ஏறுவிட்டாரென்று சொல்லுதல். அதற்குச் செய்யுள் வருமாறு:—

படையார் கருங்கண்ணி வண்ணப் பயோதர பாரமுநுண்
ணிடையார் மெலிவுங்கண் டண்டர்க ளீர்முல்லை வேலி
[யெம்மூர்
விடையார் மருப்புத் திருத்திவிட் டார்வியன் றென்புலியூ
ருடையார் கடவி வருவது போலு முருவினதே.

—திருக்கோவை—136.

கூற்றென வேவரும் வேந்தரைக் கோட்டாற் றழித்தவர்
[மேற்
பாற்றினை மேவிடக் கண்டவன் கூடற் பதியதன்வாய்
ஏற்றிரு கோடு திருத்திவிட் டாரினி யேறுதழூஉ
மாற்றலி னார்மணஞ் செய்வா னமைந்தன ரண்டர்களே.

—பாண்டிக்கோவை.

விடையிரு கோடு திருத்திவிட் டனராற்
பெடைமயிலன பேதை யிடை ... ...

* * *

... ... ... ... ...
... ... ... ... ...
... ... ... ... ... து
சொல்லல் புரியாய் துணிந்து.

அகத்திணைப் பகற்குறி முற்றும்.

---

'63-ம் ஏடு விடுற்றது: விஷயத் தொடர்பின்று' என்பது தொன்னூல் - நிலயப்பிரதி. சூளென நினைத்தல், புனங் கண்டழிதல் என்னும் இரண்டன் பகுதியும் இதனகட் காணப் படுதல் வேண்டும்.

ஆறெழுத்தந்தாதி :—அகத்திய முனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி என்னும் இந்நூல், முருகக்கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனைசெய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்திய முனிவரே பாடியதெனக் கருதப்படுவது. நூறு செய்யுள்கள் இந்நூலில் உள. பாராயணத்திற்குரியது. Dr. V. S. அருணாசலம்பிள்ளை அவர்கள் இயற்றிய பதவுரை விளக்கம் முதலியவைகளைக் கொண்டது. விலை அணா 12. தபால் சார்ஜ் வேறு.

ஏமாங்கதத்திளவரசன் :—இது ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயரால் எழுதப்பட்ட காவல்நூல். இலக்கிய நலம் துலங்கும் இக்காதற்கதை படிப்பவரைக் கவரும் தன்மையது. விலை ரூ. 1. தபால் சார்ஜ் வேறு.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

# சிதம்பரதேவர் சரிதம்.

[867-வது பக்கத் தொடர்ச்சி]

## 20. சிதம்பரசேகரன் மரணமும் ஜீவோத் தாரணமும்.

சிதம்பரசேகரன் நிஷ்டையிலேயே நிலைத்திருப்பினும் தன்னை ஈன்ற பிதா சிறைபட்டிருப்பதை நினைந்து, அரசவம்சத்தில் உதித்துச் சகல ஆயுதாப்பியாசங் களுங் கற்ற ஓர் புதல்வன் அவர்க்கிருப்பினும் கஷ்டம் நேர்ந்தபோது உதவிசெய்யாமல் அற்பமான பிராண பயத்தினால் வனத்திற் சஞ்சரித்துத் திரிகின்றனமே, என்னுஞ் சஞ்சலம் அடிக்கடி மேலிட்டு, மனோதிடங் கெடுவதும், ஆசாரியர் புகன்ற திவ்விய மொழிகளை நினைத்துத் தேறி நமக்குங் குலசேகரனுக்கும் என்ன தொந்தம், சிறைப்படுவது யார், துக்கப்படுவது யார், இராஜ்ஜியமாளுவதுயார், எது செய்வதும் பிரம்மசை தன்யம் அல்லவோ? அற்பமான இச்சடத்தை "நான்" என்று பிரமித்து யாவற்றையுந் தானாகவும் தனதாக வும் எண்ணிச் சஞ்சலம் உண்டாவ தெதனால்? பர மார்த்தத்தில் யாவும் பிரம்ம வியாபகமல்லவா? தேகங் களனைத்தும் நாசமடைபவையாயிற்றே. அவைகட்கு வருஞ் சுகதுக்கம் நாசமடைபவைகளே, என்று பல வாறு விசாரணை பண்ணிப் பகுத்தறிந்து திடப்படுவ தும், மறுபடி மனமிளகுவதும் தேறுவதுமாய் வருத் தப்பட்டு நிஷ்டை கூடியுங் கூடாமலுஞ் சங்கடப் பட்டுக்கொண்டிருக்க, ஒருநாள் சூரியோதயத்தில் நான்கு போர்ச்சேவகர்களுடன் கோமளாங்கன் வந்து தபசு பண்ணிக்கொண்டிருக்கும் சிதம்பரனையும், புகழேந்தியையும் பார்த்துச் சந்தேகித்து, "இவர்கள் தானோ நாம் தேடிவந்த பிள்ளைகள்? தூதுவர்கள் சொன்ன அடையாளங்களனைத்தும் சரியாயிருக்கின் றன. இவர்களோ இச்சைகளனைத்தையும் நீக்கினவர் கள் என்று கேள்விப்பட்டதுவுஞ் சரியே. இவர்களு டன் வார்த்தையாடினால்தெரியும்" எனநினைத்துச்சிதம் பரனிருக்கும் ஆச்ரமஞ் சென்று வெகு பரிதாபத் துடன், "ஓ மஹாத்மாவே! நாங்கள் வழிதப்பி இக் கானகம் வந்துவிட்டோம். பசியுந் தாகமும் மேன் மேலு மதிகரித்துக் களையால் வாடி இருக்கின்றோம். தயவுசெய்து ஜலமிருக்குமிடங் காட்ட வேண்டும்," என்று விநயமாய்க் கேட்டான். சிதம்பரன் கண்ணை விழித்துப் பார்த்து, ஐந்து போர்மன்னர் ஆயுதபாணி களாய்ப் புரவிமீது அதி சூரரைப்போல் எதிர்நிற்கக் கண்டு கொஞ்சமேனும் அச்சமுறாமல் புகழேந்தியை அழைத்து "இவர்கள் களைதீர ஜலமளிப்பாய்," என் றுரைத்து, மறுபடியும் நிஷ்டையி லிருந்தான். புக ழேந்தி அச்சமுற்றுத் தனதாசிரமஞ் சென்று ஆங் கிருந்த காய்கனி வர்க்கங்களை யளித்து விடாய்தீர்க்க, அவர்கள் அவனைச் சோதிக்கலாயினர்.

கோமளாங்கன் :—எல்லாந்துறந்த மஹானுபாவா! எங்களுக் கிவ்வளவு உபசரணை செய்து உணவளித் துக் களைதீர்த்த நீங்களிருவரும் யாவர்? எங்களுக் காக இங்கிருந்தீர் போலும்? யாது காரணத்தால் இவ்விளம்பிராயத்திலேயே உலக இன்பங்களைவிட்டு அரண்யத்தில் வசித்துக் காலந்தள்ளுகிறீர்கள்?

புகழேந்தி :—ஐயா? உலகவின்பம் எப்படி இருக் கினும் துக்கத்தையே முடிவிற் கொடுப்பதென்று அவைகளை இனி அணுகாதிருக்கும்படி பற்றறவெறு த்து இங்கு வந்து தவம்புரிகிறோம். நீங்கள் களைதீர்ந் திருப்பதால் எங்களை விட்டுப் போகலாம். எங்கள் வரலாற்றைத் தெரிந்துகொள்வதால் யாது பயன்?

கோமளாங்கன் மிகவும் சினங்கொண்டு புகழேந்தி யை உற்றுப் பார்த்துச் சினமடங்கினவனைப்போற் பா வித்து உபசாரத்துடன், "நீ விக்ரமசேனனென்னுங் குலசேகரப்பெருமானின் முதன்மந்திரியின் புதல்வ னல்லவா? அதோ தபசிலிருப்பது அச்சக்கரவர்த்தி யின் புத்திரசிகாமணியாகிய சிதம்பரசேகர னல்ல வா? உங்களிருவரையும் அநேக நாட்களாய்த் தேடிக் காணாமல் வருத்தமுற்றிருந்தேன். இன்று கடவுள் கிருபையால் காணப்பெற்றேன். நீ அப்படி அஞ்ச வேண்டாம். நான் உங்களுக்குப் பந்துவே தவிரச் சத் துருவல்லன். என் பெயர் கோமளாங்கன். குலசேகரப் பெருமான் சிறைப்பட்டிருப்பதால், சிதம்பரசேகரனை அழைத்துச்சென்று பாலைவனத்தைப் பட்டங் கட்டி வைக்க வேண்டுமென்று தீர்மானித்து உங்களை நான் தேடி வந்தேன். இப்போது பாலைவனமாளும் இரவி வர்மன் இராஜ்ஜிய மகப்பட்டவுடன் என்னை ஓட்டி விட்டான். அவனுக்குச் சகாயமாய் நின்று இராஜ்ஜி யத்தை அபகரிக்கச் செய்தது, தவறானகாரியமென்று அறிந்து அவனை வதைத்து இராஜ்ஜியத்தை மீட்டுச் சிதம்பரசேகரனுக்கு அளிக்கப் பிரதிக்ஞை செய்து வந்தேன். ஆகையால் நீங்களிருவரும் என்னுடன் பிரயாணப்பட்டு வரல்வேண்டும்," என்றான்.

புகழேந்தி, கோமளாங்கனென்றுணர்ந்து அவன் சொல்லில் நம்பிக்கைவாராது பயந்து, "ஐயா கோமளா ங்க ராஜனே! சிதம்பரன் இராஜ்ஜியமும் வேண்டான்; இன்பமும் வேண்டான்; வனம்விட்டு வாரான். மாதா பிதா, சுற்றம் முதலிய யாவற்றையும் பற்றற வெறு த்துமோக்ஷமேபெரிதென்று திடமாயிருக்கிறான். இரா ஜ்ஜியத்தைவென்ற இரவிவர்மனும் தந்தை குலசேகரப் பெருமாளும் சமம் என்றே நினைத்திருக்கிறான். உங் களுக்குச் சந்தேகமிருக்குமாயின் அவனிடஞ்சென்று சோதித்துப் பாருங்கள்" என, கோமளாங்கன் சங்கை களனைத்தையும் ஒழித்தவனாய் இருவரையுந் தெரிந்து கொண்டு சிதம்பரசேகரனிடஞ் சென்று புகழேந்திக் குச் சொல்லியபடி சொல்லிப் பட்டணத்திற்கழைக்க வே அவன் கோமளாங்களை வணங்கி ஆசனத்திலுட் காரவைத்து, "ஐயனே, நான் தெரியாத்தனத்தால் தேவரீருக்கு மரியாதை செய்யாக் குற்றத்தை மன்னி க்க வேண்டுகின்றேன். எனது பிதாவைப் பார்த்தது போல் தங்களைப் பார்த்து ஆனந்த முற்றேன். என் பேரில் கிருபைகூர்ந்து இவ்வளவு பிரயாசைப்பட்டு வந்து எனக்கு இராஜபதவி தருவதற்காக அழைக் கிறீர்கள். உலகவின்பத்தை வெறுத்துக் கானகமே மேலென்று பிரதிக்ஞை செய்து நான் தபசு பண்ணி வருவதால் நாடுநகரமும் வேண்டேன். தாயும் தகப்பனு மில்லை. "நான்" என்றுரைக்கும் இத்தேகமும் எனத ன்று. நீங்கள் அந்த இராஜ்ஜியத்தை வேறொருவர்க் களிப்பதோ, அல்லது நீங்களே ஆள்வதோ செய்யலாம். நான் ஒருபொழுதும் அதை விரும்புவ தன்று."



என்றுகூறி நமஸ்கரித்து வழக்கப்படி தியானத்திலிரு ந்து தனக்குஅப்போதுஉதித்தமனோவிகாரத்தை அட க்க முயன்றான். அருகிலிருந்த புகழேந்தியும் அப்படி யே உரைத்து, "நீங்கள் இராஜகுமாரனைவிட்டு நீங்குங் கள் அவர் நிஷ்டைக்குப் பங்கம் வரலாகாது," என்று வேண்டினான். கோமளாங்கன் மிகவும் மகிழ்ந்து இவ னால் நமக்கு யாதொன்றுஞ் சம்பவிக்காதென்று நிச்சயித்துப் புகழேந்தியிடம் விடைபெற்றுத் தனது துணைவர்களோடு திரும்பினான். வழியில் அவர்க ளுடன், "ஓ போர் வீரர்களே! இந்தச் சன்னியாசி யாகிய பயலை வீணாகக் கொல்வதில் என்ன பிரயோ ஜனம்? எல்லாம் வெறுத்துக் கானகமே போதுமெ ன்று இருக்கிறான். விஜயன் ஆனமட்டும் வருந்தி அழைத்தும் போகவில்லை. விஜயன், மாளவராஜன் சபையில் இவன் விசேஷங்களை எல்லாம் சொல்லி ஒன்றிரண்டு மாதகாலம் வருந்தியழைத்தும் இசைய வில்லை என்றும், உலக வெறுப்பாயிருக்கும் இவனால் யாதொரு பிரயோஜனமும் இல்லை என்று திரும்பிப் போனதாகவும் சொன்னானும். அதை நாமுமிங்குக் கண்ணால் பார்த்துவிட்டோம். குழந்தையும் யோகி யும் ஒன்று என்று கேட்டிருக்கின்றோம். இவனால் நமக்குப் பயமில்லை என்று நம்புகின்றேன். தவிர இவன் நமக்கு என்னகுற்றம் செய்திருக்கின்றான்?" என்று கோமளாங்கன் வினவவே மூன்று சேவகர் கள் "அப்படியே சரி" என்று ஒப்ப, நாலாமவன் "அர சே! நீர் சொல்வது சரியாயினும் எனக்கொன்று தோன்றுவதுண்டு. இரணசேஷம், சத்துருசேஷம், ருணசேஷம், அக்கினிசேஷம், என்னு மிவைகளை வைக்கலாகாதென்று பெரியோர்கள் சொல்வார்கள், இனி உங்கள் சித்தம்" என்றான்.

# நவராத்திரி

## [ஓர் நாடகம்]

(626-வது பங்கத் தொடர்ச்சி)

சுப :—இந்தப் பொய்க் கால்களாலா சைகிள் விடு கிறாய்?

காமா :—மோட்டார் நனைகிறது, லாயத்திற்குக் கொண்டுபோ!

உரு :—இருக்கட்டும், இவர்கள் சண்டையைப் பார்க்கவேண்டாமா - வேடிக்கையை!

ராஜீ :—வேடிக்கையா உனக்கு? இந்தா - கையை எடுத்துக்கொள் - காலுமிந்தா!

தியா:—பாரடா இவள் பெருமையை! மாயாண்டி.

மாயா —(வாங்கிக்கொண்டு) - சரி-இந்தாம்மா, நான் என்ன குழந்தையா குட்டியா - நீயே எடுத்துக்கொள் இரண்டையும்.

இந் :—மழை! மழை! வானம்! வானம்!

ராஜீ :-வேண்டாம், நீ ஆசைப்பட்டாய், இரண்டை யும் வைத்துக்கொள்!

இந் :—மழை! மழை! இடி, இடி!

உரு :—வேண்டாமென்றால் என்னிடம் தாருங்கள் எனதே அது!.........இவர்களைத் தடுத்துப் பிரிக்க மழை வந்துவிட்டது—இல்லாவிட்டால் இத்தனை எளிதாக முடிந்திருக்காது மூண்ட போர்?

இந் :—மழை! மழை! மின்னல்! மின்னொளி!

தியா :—உன் காரியமும் கைகூடிற்று என்று களிக் கிறாய்! (மழையில் நனைந்துகொண்டே) ராஜீயா, முசல் மர் விரைந்து முன்னேறிப் பாயவேண்டு மாதலால் நீ பெற்றுக்கொள் இருகால்களையும்...மாயாண்டி! நீ சோம்பக் கூடாது—விதி கருமம் என்று பாரத்தைச் சுமைதாங்கியில் குவித்து—கைகளைஎடுத்துக்கொள்—உழைத்த வண்ணமே நீ இருக்க........(சிரிக்கிறான்)

சுப :—தெய்வங்கள்போல் உனக்கு நாலு கைகள்!

தியா :—ஆம்—நீ கடவுளே ஆகிவிடுவாய்!

இந் :—மழை! மழை! புயல்! புயல்!

(தியாகு ராஜியா மாயாண்டி தாழ்வாரமேறுகின்றனர்.)

உரு :—என்ன சொன்னான் குசுகுசென அவர்கள் காதில்—சந்துசெய்துவிட்டானா அவர்களை?

இந் :—மழை! மழை! தெய்வமழை! உன்னைக் கட்டி அணைகின்றேன்——நீ என்னைக் கட்டி அணை!

(மழையில் போய் நிற்கிறான், புன்சிரிப்புடன் குதிகுதிக்கிறான்—தட்டாமாலையாடுகிறான்)

காமா :—ஐயையோ, சாகப்போகிறாள், ஜோவெனப் பொழிகிறதே!

உரு :—சாகட்டுமே! கவலை ஒழிந்தது——நான் போய்க் கொணரவேண்டுமோ—மாட்டேன். நான் நனைந்து நசிப்பதா—பாழும் மழை!

இந் :—பாழும் மழையோ? முகில்களின் திருப் பலி அறியீர்! காலை எழும் கதிரவனைக் கனகக் காணிக் கையுடன் எதிர் அழைப்பதோ அதன் தொண்டு? கொலைக்களமும் குருதிவெள்ளமும் பரத்தி மண்ணி லன்றி விண்ணிலும் நிரப்புகிற மாலைப்பரிதியை வழி யனுப்பப் பொன்மூட்டைகள் குவிப்பதுமா மலட்டு வறட்டுப் பகட்டு மஞ்சுகளின் வான்தொண்டு? மற்று வெம் மணமும் அம்மணமுமாய் வாழ்வு உழல்வோர்க் குப் பஞ்சுப்பொதிப் பொறுமைக்காட்சியாய் உள்ளங் களைப் புழுக்கவோ? தன்வினை அறிந்து மனம்குளிர் ந்து நீர்நிறைந்து நாட்டுக்கு நல்க மேகங்கள் ஆர்க் கத் துவக்கியதும் "பாரதோ—கானமேகம்—பாழும் மேகம்-முகம் கறுத்துக் கருளெனச் சீறுகிறது-காரக் கனது வெருள்தரு உருவிலே!" என்று வைவதோ வானத்தை? ஒளிகாட்டி விளைவும் பெருக்கும் மின் னலை நகைப்பதோ எள்ளி? பாழ்மழையாம்!

காமா:—ஆம்—உன்னை நனைக்கிறதே! வீட்டை இடித்துத் தகர்த்தாட்டுகிறதே-தெருவில் நடக்கவிடு வதில்லையே—கண்ணைக் குத்துகிறதே...

உரு:—மலட்டுப் பொன்னு—பொன் ஈனும் பேறு கள் யாவையே தருவன உலகில்?

---

குறிப்பு :—ஜூன், ஜூலை, ஆகஸ்டு இதழ்களில் வெளிப் போந்த "நவராத்திரி நாடகப் பகுதிகளை மேல்நோக்காகப் படித்தோரும், ஆங்காங்குக் கதைப்போக்குத் தெளிவாகப் புலனாகாமல் "தியாகு இங்கில்லையே", "மாயாண்டிஎப்பொ ழுது திரும்பினான்" "ட்ரைவிங்கில்தான் அப்பொழுதே மறைந்ததே" — "குஞ்சுவோ, இந்திரையோ இவன்" என்று இன்ன பிறவாறும் மயங்கி, ஆங்காங்கு வரிகள் பல வும் சிலவும் விடுபட்டே யிருக்கவேண்டும் என்று ஊகித்து ஆறியிருப்பர், திண்ணம். பத்திராசிரியருக்கு அனுப்பிய கையெழுத்துப் பிரதியில் பல இடங்களில் பக்கங்கள் பெரி தும் சிறிதும்காணாமையே காரணம் அவற்றை எங்கெங்கே சேருகவேண்டும் என்று அந்தந்த இடங்களைக் கூறி இனிக் கலாநிலயத்தில் வெளிப்படுத்துவது கடினமான காரியம் என்று வருந்துகிறேன். இனிவருவன இடையீடின்றித் தொடர்ந்தோம்.—நூலாக்கியோன்.

காமா:—மழை நிற்காதா...சாமியாரே—மழையை நிறுத்தமாட்டீரா, அவளைத்தான் கொணரீரா?

துரை :—(மேல் கீழாகத் தலையாட்டி) யோசிக்கிறேன் இருங்கள்—அவளைக் கவர முடியவில்லையே!

மாயா :—நூல்நூலாக மானத்துப் பஞ்சுகளை...

சுப :—மானமல்ல, வானம்...

தியா :—பஞ்சு துணியாகிக் காப்பது மானத்தை—அதுவே சரி—என்ன சொல்லவந்தாய்?

மாயா :—நூல் நூலாக மானத்துப் பஞ்சுகளை எல்லாம் நூற்கிறதுபோல் விழுகிறதல்ல—மழை!

ராஜீ :—இவ்வளவும் மெய்யாகவே நூலாயிருப்பின் காந்திநாயனர் எத்துணை மகிழ்வர்?

சுப :—நூலே இவை—பஞ்சாடையாய் நாட்டினைப் போர்க்குமல்லவோ பின்னர்!

தியா :—(கண்களில் நீர் ததும்ப) ஆகா——என்ன மறைமொழிகள் மூவீரும் மொழிந்தீர்—ஆம்-அறிந்தேன்—மின்னல்போல் என் அகக்கண் திறந்தது, -வானின்ற இழியும் இத் தெய்வீகப்பொழிவில் திளைத்து! நானும் குதிக்கப் போகிறேன் (இந்தியை அருகு நின்று தானும் குதிகுதிக்கிறான், ஆனந்தக்கூத்தாடுகிறான்)

உரு :-பாருங்கள், அந்தப் பித்தனையும்-காந்தியை!

காமா :—ஐயையோ—இவனால்தான் எல்லாம்!

சுப:-மழைகூடப் படைத்தாரோ இவர் (சிரிக்கிறாள்)

காமா :—கண்ணே! குஞ்சு—வாடீ! மழையில் நனையாதேடி!

இந் :—கடவுள் மழை! தெய்வமழை! ஆனந்த மழை!

ராஜீ:—சைகிள் ஓட்டும் இன்பமே இன்பம். மழை நின்றபின்-தூயமழை! தூயமழை!

மாயா :—வெட்ட உழ—எளிது இனி! தோழ மழை! தரும மழை!

சுப :—ஆகா—உலகே என்ன பொற்பில் பொலிகிறது—அழகுமழை! மலர் அலர்த்தும் அணிமழை! தாய்மழை!

உரு :—ஏதோ—வாசனை எழுகிறது பார்—நாற்ற மழை!

காமா :—அடை மழை.

தியா:—அடைமொழி இவையனைத்தும் மிடைந்து புகழ் மாமழை! தெய்வமழை! காந்திமழை!

துரை :—காந்திமழையா?

தியா:—ஆம்; சந்திரகாந்தி தந்தமழை! சந்திரகாந்தி கொணர்ந்த தவமழை!

சுப :—சூரியகாந்தி கொணரும் என்பர்—சந்திரகாந்தியும்!

தியா :—ஆம்;—சந்திரகாந்தியும் கொணரும்? கர்ம சந்திரன்—மோகன சந்திரன் (குதிகுதிக்கிறான்)

சுப :—ஓகோகோ (வியந்து மகிழ்கிறாள்)

காமா :—பைத்தியம் பிடித்திருக்கா இவனுக்கும்-நேற்று மாளய அமாவாசை—முற்றிவிட்டது.

தியா :—ஆம்; பிதிருக்களை, இறந்தோரை—தென் புலத்தோரைத் தொழுது நினைந்து கண்ணீருகுக்கும் மகாலய நாள் நேற்று—மாநிலத்திலே புலத்திலே தென்னது பொன்னது பொருவற்றது அழகது மேலைநாள் இறந்தகாலம் சிறந்த நம் இந்திய தேவி நாடே என்ற பித்தம் நேற்றுத்தான் முழுதும் என் தலைக்கேறி ஆட்டிற்று என்னை—இன்றும் ஆடுகின்றேன்—

சுப:—மாளய அமாவாசையின் தத்துவமோ அது!

காமா :—துலுக்கனிவனுக்கு நம் சாஸ்திர ஸ்தோத்திரங்கள் என்ன தெரியும்......அவளையும் பாருங்கள் தலை எல்லாம் நனைந்தது—பாவாடையும்—டீ—குஞ்சு—உன்னைத்தான்! ஆதி! ஆதிமூலம்!

இந் :—யார் என்னை அழைப்பது—மழை, மழை!

காமா :—நனைந்து நாசமாகிறேடி—வா இங்கே இந்தத் தாழ்வாரத்திற்கு—

இந் :—மாட்டேன்—மாட்டேன்! தாழ்வு படவோ! உள்நுழையும் விருந்துப் பெருமையின்றிப் பிச்சைச் சிறுமையொடு—தண்ணீர்போல் மேலிருந்து உகுக்கும் இறப்பே— கவிகின்ற வெளியிடத்து நின்று நான் இழிவு படவோ—மாட்டேன்! (குதிகுதிக்கிறாள்)

தியா:—பிறந்தது, பிறங்குகிறது தற்பெருமை! தன் மதிப்பு, தன் கோன்மை! தீரம்! என்ன வீரமொழி! சுதந்தரத்தாய் இயக்குகிறாள் இவள் உடலை. இசைக்கிறாள் இவள் நாவிலே, இலங்குகிறாள் இவள் உயிரிலே! (குதிகுதிக்கிறான்) கேட்டீரா நாதமொழி?

சுப :—ஒன்றும் அறியாள் என்றெண்ணினேன்—என்ன ஞானம்!

காமா:—நீயும் மெச்சுகிறாயாம்மா—குஞ்சு! உள்ளே வா—இப் புத்தக அறைக்குள்!

இந் :—மாட்டேன்—மாட்டேன்! என்ன புத்தகங்கள் அவை—என்ன கல்வி ஊட்டுகின்றன!—தாய் மொழியும், மொழித் தாயும் உளவோ? மூளைபுகுந்து ஈரல் குலைத்து உடலை மடியில் படுத்தும் நூல்களிடையேமாட்டி இனி, வலைமான்போல், மாளேன்—மாட்டேன்—மாட்டேன்! (குதிக்கிறாள்) இடி! இடி!

தியா :—கேட்டீர்களா வேதமொழி! "பள்ளிக்கூட விலக்கு"ப் பாடுகிறாள். மாயாண்டி—வருந்தேல் நீ—படிப்பின்றேனும் உய்வுண்டு உனக்கு — ஆங்கிலம் பிதற்றுயேனும் அனுதையல்ல நீ (குதிக்கிறான்)

உரு :—எனக்கொன்றும் விளங்கவில்லையே!

ராஜீ:—மழை கனக்கிறதே—நீர் ஆறாக ஓடுகிறதே!

காமா :—ஐயையோ—வாம்மா! உன் நன்மையே நாடுகிறேண்டி—நியாயம் நெறி அறிய வேண்டாமா—தானும் அறியாள் அறிஞரையும் அணுகாள்...அந்த அறைக்கேனும் ஒதுங்கித்தொலை!

இந் :—மாட்டேன்—மாட்டேன், ஒதுங்குவேனோ குலைந்து தொலைவதற்கு? வழக்குக்களைப் பெருக்கும் அறை! கட்சிக்காரர் கட்சியாடிப் பகை மூட வாதாடி வாடும் அநீதி அறை! மழையே மழை! மின்னலொளி!

தியா :—கேட்டீரா நீதிமொழி. சாமியாரே-மோட்டார்க்காரரே! பகைமூட்டேல்! சண்டைவேண்டாம்! நீதிமன்ற விலக்குப் பாடுகிறாள் செவிதருவீர் (குதிக்கிறான்)

துரை :—சண்டை போடுபவனா நான்—சமரசம் முயல்பவனே நான்!

உரு :—போய் அவளைத் தடுக்கட்டுமா—பாழும் மழைக்கு அஞ்சுகிறேன்!

சுப :— துணிதான் பெரிது-உனக்குத் துணிதுணி! —மழைக்கே அஞ்சினால், அவருக்கும் அஞ்சீரோ? (சிரிக்க)

உரு :—என்ன சொல்லுகிறாய்—காதருகு வந்து சொல்-மழை இரைச்சலில் கேட்கவில்லை—(அருகுவர)

சுப :—(தூரவிலகி) உமக்கு ஒன்றும் சொல்ல வரவில்லை.

ராஜீ :—வாய்க்காலா ஓடுகிறதே நீர்—கப்பல் விடுவோம்—விளையாடலாமா?

காமா :—ஆமாண்டி, குஞ்சு—கப்பலோட்டுவோம். பாவையாடுவோம்—கொலு அறைக்கேனும் நீ குதித்தோடிப்போ!

இந் :—மாட்டேன்! மாட்டேன்!—யார் வீற்றுளர் கொலு அங்கே? அரசோ,-பரசோ? குதித்தென்ன நயன்—கொதித்தென்ன பயன்? விளையாட்டிற்கே, விளையோட்டற்கோ, கொலுக்கொற்றக்கூடம்! கலந்து மந்திரம் சூழ்வரோ? அலந்து தந்திரமே தாழ்வர்!—ஆசைகாட்டி மீசையிலிகளைக் காசாலும் தூசா



லும் பசக்கிக் கசக்க! மாட்டேன்—மாட்டேன்! மழையே மழை! காற்று, புயல்!

காமா :—ஏன் இப்படிப் பிதற்றுகிறாள் பெண்!

சுப :—பொம்மைகளால் சும்மா மயங்குவாளா எந்நாளும்!

தியா :—கேட்டீரா—கீதமொழி-சட்டசபை விலக்குச் சாற்றுகிறாள்—ராஜீயா—கொலு கண்டு மயங்கேல்? கப்பலோட்டுவது வீதிச் சாக்கடையிலோ—கனைகடலிலல்லவோ துணிந்து நீந்தவேண்டும். நாவாய்—நாவும் வாயும் கொலுமண்டபத்தில் அலைத்துப் பயன் என்ன?

உரு:—இருவருக்கும் விளையாட்டோ—இவ்வாறு மழையில் மதர்க்கின்றனர்—பின்னர் அவதிப்படும்போது அறிவர்.........எத்தனை நேரம்!

ராஜீ :—மழை இப்போதைக்கு ஓயாது — நிச்சயம்!(இடி இடிக்கிறது)

காமா :—இடி!—அம்மாடி (காதை மூடிக்கொண்டு) மின்னல்—அப்பா...

உரு :—கண்ணைப் பறிக்கிறதே!

காமா :—ஐயோ—கண்ணே—வாடி இங்கே-இடியும் மின்னலும் ஈரமும் காற்றும்—கொல்லப்போகிறதன்னே!

இந் :—இடித்துத்தகர்த்து...கோடி சூரிய ஒளிச் சத்தியை வெளிக்காட்டி—ஈரம் தோலுள்ளே ஊறி ஈரலையும் இரக்கத்தையும் நெகிழ்த்தவே-அஞ்சுவதேன் காற்றின்றி மூச்சேது உயிர்க்கு.

தியா :—கேட்டீரா—போதமொழி! உய்ந்தேனினி உய்ந்தோமினி!

ராஜீ:—நானும் சென்று நனையப்போகிறேன் மழையில்.

சுப :—இரு—விந்தையிது! கவனமாய்க் கேள்!

காமா :—இந்த அறைகளுக்கு அஞ்சினையாயின்-அதோ-மச்சேறி—மாட அறையில் மகிழ்ந்திரு போ.

இந் :—மாட்டேன்! மாட்டேன்! பிச்சேற்றிப் பேதையராக்கும் பீடையறை! கனமே கண்ணியமே இல்லாரை, கீழோர்தம் வஞ்சப் புகழ்ச்சியால் மகிழ்த்தித் தூக்கி உயர்த்திப்,பறத்தி-வானில் மஞ்சப் படலமெனத் திரிதர, "கனம் மிக்கார் பணியத்தக்கார்" என—உலகோர்க்குக் காட்ட - பாராட்டப் பரப்பாவையை யாட்டுவதுபோல், மயங்கி மண்ணோர் விலக்க, சதியும் நூலும் நூற்றுக்கக்கும், பட்டங்கள் எழு அறைக்கோ—மாட்டேன்—மாட்டேன்!—ஊரினும் உயர்ந்து மதர்த்துநின்று சிறுமிதத்தொடு ஏசும் அம்மோக அறையை — மேகங்காள்—மின் எரித்துப் பொரித்துக் கரிக்கிரோ?

தியா :—கேட்டறிந்தீரா — சோதிமொழி! "பட்டங்கள் விலக்கு"ப் பறைகிறாள்—பகட்டு, பசப்பு—பாராட்டு சீராட்டு வேண்டோம்—மானிடம் ஒன்றே-ஒருதனி உயர்வே!

காமா:—அவளைப் பிடித்துவர யாருக்கும் துணிச்சலில்லையா—நான் போகிறேன்—சதுப்புக்கு அஞ்சமுடியாதினி-நல்லவேளை—மழை சிறிது குறைகிறது-தானே வந்துவிடுவள்.

உரு :—நான் போய் அவளைப் பிடிக்கிறேன்—வாடா இங்கே தடியா! (தியாகுவை நோக்கிச்செல்ல)

காமா:—வாம்மா! வேறு துணி அணிந்துகொள்—அதனைக் களைந்துவிடு, ஈரம்!

இந்:—மாட்டேன்—மாட்டேன்! ஈரநீர்த் துணியே வேண்டும். புனிதத்துணி—

சுப:—நீட்டு விழுப்பு அழுக்கு என்றல்லனைக்கிறோமல்லவா—புனிதத்துணியே—

இந் :—புண்ணியத்துணி! நூற்போரும் நெய்வோரும் அழுங்கிப் புழுங்க...தீயிலிருந்து எழுந்த தீத்துணி கோரத்துணி-பாபத்துணி-சாபத்துணி--வேண்டேன்— மாட்டேன்!

தியா :—(பிடிக்க வந்த உருமபிள்ளையின் பிடியிலிருந்து திமிறி) கேட்டீரா—ஓதமொழி ஈரஇரக்கமொழி-இது ஓதக்கட லலைபோல் கரைபுரட்டிப் பாயாதே—நாட்டுள்ளே! "ஆலைத்துணிவிலக்கு"ப் பகர்கின்றாள் —கேட்டீரா—கேளீரா?

உரு :—அவள் செய்யுள் யாக்கவும் நீ அதற்கு உரை பெருக்கவும் இனிச் செல்லாது-வா இங்கே (தியாகுவைப்பற்றி இழுக்க)

காமா:—(கீழிறங்கி) இவளை நான் ஈர்க்கிறேன்......

மாயா :—மழையோ நின்றுவிட்டது......

சுப :—இத்தனை திடுக்கென! எல்லாம் மாயமாய் மயக்குகிறதே——

ராஜீ :—அவரை என்ன செய்யப் போகிறாய்?

இந் :—பிடிபட மாட்டேன்.

உரு :—இவனைக் கோர்ட்டறையில் அடைக்கப் போகிறேன்.

தியா :—உபதேசம் இப்போது இவள் எனக்கும் உமக்கும் கழறியதை ஆழ்ந்து அறிய இடமும்பொழுதும் ஈகின்றாய் எனக்கு—வந்தனம்—குஞ்சுவும் என்னோடு வரட்டும்...

இந் :—நான் அடைபடேன் சிறையில்!

காமா :—பிடி அவளை—பிடி மாயாண்டி—சுபத்திரை கூப்பிடு நீ!

சுப :—குஞ்சு!

ராஜீ :—நானும் பிடிக்கிறேன்—

இந் :-முடியாது(கொலு அறையில் புகுந்து மறைகிறாள்)

தியா :—(உரும பிள்ளையுடன், ஆபிசறையில் நுழைகையில்)—எங்கே போயினள்—கொலு அறையிலா—ஐயையோ!—

உரு :—கிட உள்ளேநீ! (கதவைச் சாத்தித் தாழிட்டு) இனிப்பயமில்லை—மழையும் நின்றது—குஞ்சு ஆடை மாறி வருமுன் சாமியாரோடு கலந்து யோசிப்போம்.

காமா :— ஆம்-நேரே-கண்கூடாகக் கண்டீரல்லவா கூத்தை?

ராஜீ :—ஐயையோ—என் குதிரை நனைந்து...மறந்தேனே—துடைக்கச் செல்லணும் உடனே -(சைகிள் ஏறி வலப்புறத்தில் மறைகையில்)

மாயா :—என் பழங்களும் நனைந்தனவோ யாதோ-போய்ப் பார்க்கிறேன் சாரல் செய்த கோரத்தை!

சுப :—பரிசாகத்தானே பெற்றாய்? (உருமபிள்ளையை நோக்க)

மாயா :—ஆம்-அவர் மனது தாராளமனதே—என்னிடம் பணமேது (மச்சு ஏறுகையில்)உருமபிள்ளை நல்லவர்—இன்று நல்ல நாள் தானே!

சுப :— சாமியாரைக்கேள்! நவராத்திரிநன்னாளே!

காமா :—சுபத்திரை——நீ போய்க் குஞ்சு என்ன செய்கிறாள் பார்—புது ஆடை உடுத்து.

சுப :—மழை நின்றிருக்கிறது— நான் வீடேகின்றேன்.

காமா :—பயமில்லை. மீண்டும் தூறினால், உன்னை மோட்டா ரேற்றி வீடு சேர்ப்பேன்......

உரு :—அதற்கென்ன, எது செய்யவும் தயார்!

சுப :—ஏழைக்கும் மோழைக்கும் மோட்டார்தான் பாக்கி!—ஊர் சிரிக்கும்—பார் கரிக்கும்! மாட்டேன்!

காமா :—பார்—நீயே——உன்னிடம் தலைபின்னிக் கொண்டிருக்கிறாள்—உன்னைக் காணவும் அணுகவும் அவள் அஞ்சுவதில்லை— கொஞ்சம் தயவுசெய்—

சுப :—சரி (கொலுஅறை நோக்கி நடக்க)

காமா :—அவள் துணிகளைத் தேடி—நீயே......உனக்குத் தெரி[illegible] தலை துடைத்து—

சுப :—[illegible] [illegible]கோ—தெரியும் என[illegible])

18943

உரு :—சொன்னவாறு படியும் பொன்னணங்கு !

காமா:—ஏழ்மை இழைக்கிறது தாழ்மை—எதிர்த்து எங்ஙனம் எகிறுவாள்.

உரு :—அதெல்லாம் முற்காலம்—இன்றோ ஏழையரும் கிளம்பிவிட்டனர்—கிளர்க்கின்றனர் – கிள்ளுகின்றனர், துள்ளுகின்றனர்—சீச்சிடுகின்றனர். கெஞ்சுவதேன் அவளை?—ஏவினால் மறுப்பளோ. மாயாண்டி ஏன் சாயாண்டியும் சோம்பாண்டியு மானான்?—அடிமைகளுக்கே ஆண்டையர்கள் அரள்வதால்.

காமா :—மெய்யே- நீ வேலையாள் போலின்றி, எஜமானன் என்ற தோரணையில் நடந்துகொள்வது காண மிகவும் மகிழ்கிறேன்.

உரு :—மோட்டாரோட்டி ஒரு வேலையாளோ—அவனது உரிமைகளை விரல்விட் டெண்ணத் துவக்கினால்—அரக்கர் கைபோன்று இருபதும் ஈராயிரமும் வேண்டாமா ?

—*=*—

# க ம் ப ரா மா ய ண ம்

## அயோத்தியா காண்டம்—11. குகப் படலம்.

[878-வது பக்கத் தொடர்ச்சி]

உண்ணேகிழ்ந் துரைக்கு மண்ணல் வேட்டுவன்.

இனி, நாவாய் வேட்டுவ நற்குல நம்பி குகன்தான் நம்மனோ ரகங்கரைந்துருக நடிக்க வருகின்றான். அன்புக் கடலிற் கடைந்தெடுத்த வோர் அருமருந்தன்ன இவ்வண்ணலை விட்டுப் பிரிய எப்படித்தான் இராமனுக்கு மனம்வந்ததோ அறிகிலேம். எதிர்நலம் யாதும் நயவாமல், இராமனை யணுகியவளவில் கழிபெருங்காதல் பொழிதரப் பணிவிடைசெய்து பின், "உத்தம, உனக்கு உற்றதெல்லாம் புரிகுவன்; இருளினும் நெறிசெல்வேன், ஒன்றும் வெருவலென், வசையில்லேன், அடிநாயேன், மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேன், பொருவரு மணிமார்பா யான் போதுவென் உடன்" என்று வேண்டிநின்ற இவ்வஞ்சனை யாதுமறியாப் புனிதப்புளினைவிட்டு இரக்கமெலாம் உகுத்தகன்ற வள்ளல் பிற்றைநாள் மறைவிருந்து வாலியை மாய்த்ததும் வியப்பற நிற்குமோர் இயற்கை நிகழ்ச்சியே யென்று குகன்பாலுள்ள பரிவினால் இராமனைத் தெழித்துரைக்கத் துணிவதன்முன் உறுபொருளொன்று நன்குமதித்து உணர்தல்வேண்டும். குகனைத் தன் இளையோன்முறையில் இணைத்துக்கொண்டு பாராட்டிய இராமன் பரிவுரையும் பிரிவுரையும் புகன்றதெல்லாம் நயமொழி இனிக்கப்பேசிக் குகனைக்கழித்தயல்போகச் செய்த போலிச் சூழ்ச்சிகளல்ல. 'அடிநாயேன்' என்றடைந்த அன்பனுக்கு, "உன் தொழிலுரிமையின் யான் உள்ளேன்" என்று விரைவுடன் விளம்பியபோது இராமன் அடியார்க்கு அடியானாகும் தன் ஆதிமூர்த்தியின் அம்சத்தை ஐயமும் பொய்மையும் அற நெறியிற் காட்டினான். இவ்வாறே தன்னைப் பிரியலாற்றா அன்பினரைத் தானும் பிரியத் தரியான். ஆயினும் வினையின் விளைவை உன்னி அன்று குகனின்று தன்னைப் பிய்த்துக் கொண்டுபோயது இன்றியமையாததாயிற்று. உடன்வருவானேல், மாயமான் கூயநாள் இலக்குவன் விட்டகன்ற காவலைச் சிதைக்கிப் புளிஞன் புரிந்துநிற்பானாதலின், இராவணன் சூழ்ச்சி செல்லாததாகி, அரக்கர் குலத்தை அழிப்பதற் கெடுத்த இவ்வவதாரம் வினைமுற்றாமல் விலகவேண்டிநேருமென்றஞ்சியோ இராமன் இவ்வேட்டுவக் குரிசிலை நீத்து ஏகினான்! "ஆயிரம், இராவணர்தான் அழியாராகுக, குகனையோ இராமன் உடன்கொண்டு செல்லாமை குரூரமானதே," என்று இன்னமும் எண்ணுவார்தம் குகபக்தி சாலப்பெரிது. எனினும், இராமனையே இழுக்குற நினைக்கச்செய்யும் அத்துணைப் பக்திக்கும் குகன் உரியவனாகின்றான் என்பதிலும் ஐயமிலது. தன்னை நாடி யடைந்தவர்களைத் தன்னிலும் மிகுந்த சிறப்புடையராக்குதல் எம்பெருமான் அன்பினால் இனிது புரியும் மாயங்களுள் ஒன்று. கண்களைச் சூன்றுகொண் டல்லது திண்ணனார் பெருமையைத் தெரிவித்திருந்தா லாகாதோவென்று காளத்தியப்பரையுங் கேட்கலாமே.

இத்தகைய குகப்பெருமான் முன் னோர் மன்னனை அடிபணிய வந்தவாற்றைக் கண்ட நாம் இன்று வேறோர் மன்னனை முடிதுணிக்க வந்த பரிசினைக் கம்பரே பகரக்கேட்போம். இந்தச் செய்யுள்களுக்கு இணையாய நயமுடைய செய்யுள்கள் மற்றொரு இலக்கியத்திலுளதென்று இயம்புவார் எதுதா னியம்பமாட்டார்.

அறுபதினாயிரம் அக்குரோணி சேனைசூழப் பரதன் வந்து கங்கைக்கரையில் இறங்கியதும், இராமனைப் பொருதழிக்க எழுந்ததுபோலும் இப்பெரும்படை என்று விஞ்சிய சினத்தனாய,

குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கள் தீநாற நாசியிற்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்

[குகனென்னும் பெயருடைய எமன்போன்ற ஆற்றலையுடைய வேடர் தலைவன், தொகுதியாகவுள்ள வலிமையுள்ள அச்சேனையைப் புழுதிப்படலத்திற்கு நிகராகக் கருதினவனாய்ப் பார்த்து, சினநகை மிகவும், கண்களிலிருந்து தீப்பொறி பறக்கவும், மூக்கில் புகைகிளம்பவும், வளைந்தும் நிமிர்ந்தும் குதிக்கின்ற தன் புருவத்தைப்போன்ற போர்வில் ஒன்றினைக் கையில் உடையவனும்]

மையுற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயில் பிடித்த காலன்தான்
ஐயைந்நூ றுயிர முருவ மாயின
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான்

[உயிர்களெல்லாம் கேடு அடைய முடிவு செய்யும்படி கையில் உற்ற சூலத்தை ஏந்திய எமன்தான், ஐம்பதினாயிரம் வடிவம் எடுத்ததுபோல் தன்னைச் சூழ்ந்துள்ள சேனையையுடையவனும், வில்வித்தை கற்றவனும்]

கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கட் டீயினன்
கொட்டிய துடியினன் குறிக்குங் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளர்ந்த தோளினான்

[கட்டிய உடைவாளை உடையவனும், கடித்த உதட்டையுடையவனும், வெட்டிப் பேசுகின்றவனும், விழித்துப் பார்க்கின்ற கண்களாகிய நெருப்பையுடையவனும், அடிக்



கின்ற உடுக்கையை உடையவனும், ஒலிக்கின்ற ஊது கொம்பையுடையவனும், போர் வாய்த்துவிட்டதென்று பூரித்த தோள்களையுடையவனும்]

எலியெலா மிப்படை யரவம் யானென
வொலியுலாஞ் சேனையை யுவந்து கூயினான்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே

["இந்தப் படைகளெல்லாம் எலிகள்; அவை அனைத்தையும் விழுங்கும் பாம்பு நான் ஒருவனே ஆவேன்" என்று கூறி, உலகில் உள்ள வலியுடைய புலிகளெல்லாம் வந்து ஓரிடத்தில் சேர்வதுபோலக் கூடும்படி ஆரவாரம் செய்யுந் தன் சேனையை மகிழ்ந்து கூவி அழைத்தவனுமாய்]

மருங்கடை தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்கடை நெடும்படை யொல்லெ னார்ப்பினோ
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே

[ஒருங்கு அடைந்துநின்ற பெரிய சேனைகள் ஒல்லென்று ஒலிக்கின்ற ஆரவாரத்துடனே, தப்புதற் கரிய கல்பக்கடையில் இடியை யுடைய பெரிய மேகங்களும் கரியகடல்களும் கிளர்ந்ததுபோலக் கலந்து தன்னைச் சூழ்ந்துவர அருகிலுள்ள கங்கையின் தென்கரை வந்து தோன்றினான்.]

படைஞர்திரளை உடன்கூவி எற்றுக்கு அழைத்து வந்தானோவென்று அயிர்க்க வேண்டா. உதவிக்கோ அன்று. புதிதாய் முறைசெய்துகொண்ட தன் அண்ணன் இராமனைப் போன்றே கூட்டொருவரையும் வேண்டாக் கொற்றவன் குகன். பகைப்படை எலிகளனைத்தையும் தானொருவனே விழுங்குமொருகாட்சியைக் காணவே அழைக்கின்றான். இது தெரியாமல், தம்மையும் போர்த்துணைக் கழைத்தானெனக் கருதி விரைவுடன்,

தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவா
னன்றபே ரரசவீ ரமைதி ராமென்றான்

[வந்துசேர்ந்த வேடர்களைப் பார்த்து, "இராமனைவெல்லும் சூழ்ச்சியோடு இங்கு வந்து இறங்கிய இச்சேனையை யமலோகத்திற் கனுப்புவதற்கும் என் உயிர்த்துணைவனாகிய இராமனுக்குச் சிறந்த பெரிய இராச்சியத்தைக்கொடுப்பதற்கும் நானே ஏற்றுக்கொண்டிருக்கின்றேன்—நீங்கள் சும்மாவிருந்து பார்த்திருங்கள்" என்றான்]

என்று, நாவாய் ஒன்றும் ஓட்டவேண்டாவெனக் கட்டளையிட்டுப் பிறகுப் பகையென மதித்தவப் பரதன் சேனையைப்பார்த்துத் தெழித்தனனாய்ப் பின்னுஞ் சில தன் இனத்தோரை நோக்கி இயம்பலுற்றான். இந்தச் செய்யுள்களில், குகனும் அவனை அமைத்துத் தந்த கம்பரும் தம்மையே விஞ்சிக்கொள்கின்றனர். இப்பாடல்களை நவிலும் நாவும் கேட்குஞ் செவியும் நினைக்கும் மனமும் நவைதீர்ந்த நன்மையை அடைந்தனவாய், எல்லோரையு மெங்கும் நல்லவராக்கி நல்கும் வண்மை வாய்ந்தன. கூறுவான் குகன்,

அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளுமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர்போய்விடி னாய்க்குகனென்றெனை யோதாரோ

[என் அருமையான உயிரிற்கு நாயகனாகிய மைபோன்ற நிறமுடைய இராமன் ஆளாதபடி, வஞ்சனையினால் இராச்சியத்தைக் கைக்கொண்ட இந்த அரசரும் இங்கு வந்தாரோ? அவரைக்கண்டதும், தன்தொழிலைச் செம்மையாக நடத்தும் என் அம்புகள் தாமாகவே தீ உமிழ ஆரம்பித்துவிட்டன. ஏவினால் இவை போய்த் தாக்காவோ. இவர்மாத்திரந் தப்பிப் பிழைத்துப்போய்விட்டால் நாய்க்குகன் என்று உலகத்தார் என்னை இழித்துப் பேசமாட்டாரோ]

ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு [சொல்லன்றோ
ஏழமை வேட னிறந்தில னென்றெனை யேசாரோ

[ஆழமாகிய பெரிய அலைகளையுடைய இந்த ஆற்றைக் கடந்துதான் இவர்கள் போய்விடுவார்களோ. இவர்களுடைய பெரிய யானைச்சேனையைக்கண்டு பயந்து விலகியோடும் வில்வீரனோ நான். என்னை முன்னிலைப்படுத்தி இராமன் சொன்ன தோழமை என்ற அந்தச்சொல் ஒன்று எனக்கு வெற்றியும் ஆற்றலும் தருவதற்குப் போதாதோ. யான் சும்மா விருந்துவிட்டால் இந்த ஏழைவேடன் செத்திலனே என்று என்னை உலகத்தார் ஏசமாட்டார்களோ]

முன்னவனென்று நினைந்திலன்மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றனனென்றில னன்னவை பேசானேல்
என்னிவ னென்னையிகழ்ந்ததிவ் வெல்லைகடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினில் வேடர் விடுஞ்சரம் வாயாவோ

[தனக்குத் தமையன் என்றும் நினைக்கவில்லை, வலிமையுடைய புலிபோன்ற ஒருதம்பி இலக்குவன் அவனுக்குத் துணையாய்நிற்கின்றான் என்பதையும்நினைக்கவில்லை. இவைகளைத்தான் நினையாதுவிட்டாலும் என்னையும் இவன் மதியாது இகழ்ந்தது என்ன மதியீனம். அப்படி யிகழ்வதாயின் இவ்வெல்லையைக் கடந்த பின்னன்றோ அது செல்லும். மன்னவர்களுடைய நெஞ்சில் வேடர் விடும் பாணம் தைக்காதென்று எண்ணிவிட்டானோ]

பண்டைக் கேள்வியிது. அதன் விடைமறந்த மன்னர் மேனாடுகளில் பலர் இருந்துளர். அவ்வாறிருந்தவர்களில் முதல் சால்லஸ் (Charles I) என்பான் ஒருவனை முன்னூறு வருடங்களுக்குமுன் அவன் குடிகளில் கிராம்வெல் (Cromwell) என்பவன் படைதிரட்டிப் பொருது தலை துணித்து இங்கிலாந்தைச் சிறிது காலம் குடியரசாக்கினான். ஆயினும் அரசன் மரபினரிடைப் பற்றகலா உள்ளமுடையவர்களும் சிலரிருந்தனர். அன்னவர்களில் ஒருவர் ஆங்கிலப் புலவரேறு எனவழங்கும் டாக்டர் ஸாமுயல் ஜான்ஸன் (Doctor Samuel Johnson) என்பவர். இவர், குடியரசுக் கட்சியினர் ஒருவரைச் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது, "உங்கள் கிராம்வெல்தான் கடைசியில் என்ன சாதித்துவிட்டான்" என்று பரிகசிக்கவும், அவர், "ஏன், மன்னவர் கழுத்திலும் ஒரு பூட்டு (joint) உண்டென்று அவர்களுக்குக் காட்டித் தந்து உணர்த்தினான் அக் கிராம்வெல்" என்று எதிருரைத்தது, "மன்னவர் நெஞ்சில் வேடுவர் விடு சரம் வாயாவோ" எனவினவிய குகனுக்கு 'ஆம்' என இணங்கி யுரைத்த விடைபோலாகி நிற்கின்றது.

வேந்தர்தம் உடலினமைப்பை [illegible] சுடுசரங் கொடு சோதிக்க [illegible] அவர் மன அமைப்பை அசித்[illegible]

பாவமு நின்ற பெரும்பழி [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[பாவமும் நிலைபெற்ற பழியும் பகையும் நட்பும் பிறிதன் பமும் என்னும் இவையனையவைகளை மண்ணுலகு ஆள்பவர் ஒருபோதும் எண்ணுவதில்லையோ! அதுகிடக்க, எனக்கு உயிர்த்தோழமை தந்த இராமன்மேல் இச்சேனை போவதாயின் தன்னுயிரைத் தாங்கியன்றோ செல்லவேண்டும்.]

எனத் துணிகின்றான். அத்தகைய அரசர்பல ரிருப்பதால், கல்லாத குணநலமுடைய குகன் பரதனையும் அவர்களி லொருவனாய் மதித்துவிட்டனன்.

அருந்தவ மென்றுணை யாள விவன்புவி யாள்வானோ
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் [மாயேனோ
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
யிருந்தது நன்று கழிக்குவ னென்கட னின்றோடே.

[என் பெருந்துணைவனாகிய இராகவன் அரிய தவத்தைப் பூண்டிருக்க, இவன் புவியை ஆளும்படி விடுவேனோ! என் னுயிர் என்ன கிடைத்தற்கரிய தேவாமிர்தமா! இராமனுக்கு உதவியாயிருந்தேனென்ற மிகுந்த புகழைக்கொண்டு பிறகு நான் சாகமாட்டேனோ! பொருந்திய நட்பை விரும்பிய இராமனுடன் போகாமல் நானிங்கே இருந்துவிட்டதும் நல்லதாயிற்று. என் கடமையை இன்றைக்கே கழிப்பேன்]

தும்பியு மாவு மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பியல் தாரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ
வெம்பிய வேடரு ளீர்துறை யோடம் விலக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் மாய்வது நன்றன்றோ.

[யானைகளும் குதிரைகளும் நெருங்கிய பெரிய படை சூழவந்த வாசனை பொருந்திய மாலையை அணிந்தவர்கள் தம் வாள்வலியையெல்லாம் கங்கையைக் கடந்தபின் அன்றோ காட்டக்கூடும். ஆதலின் கோபம் மிகுந்த வேடர்களே, இத்துறையிலிருக்கின்ற ஓடங்களையெல்லாம் விலக்கிவிடுங்கள். இனி இராமனுக்கு முன்னே நம்முயிர் போவதும் நன்றன்றோ]

என்றனன். போரிடை வெற்றியும் தோல்வியும் ஒருவழி நில்லாதென்பது உணரவல்லவன் இக் குகனாதலின், தானே தோற்றாலும் பின் இப்படை கங்கையைக் கடக்காவண்ணம் கரையிலுள்ள ஓடங்களை விலக்கி விடும்படி முதலிலே கட்டளையிடுகின்றான். அப்படித் தன்னையே வென்றவர் இராமனையும் வென்றழிப்பது திண்ணமென இவனுடைய உள்ளத்தில் தோன்றியது போலும். ஆதலின் தோல்வியே நேருமாயின் பின் இராமன் மாய்வதற்குமுன் தாமே மாய்வது தக்கதெனத் துணிந்தனன். எனினும் உடனே அவ்விரண்டு ஐயங்களும் அடுக்காவெனத் திருத்துவானாகி,

போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகஞ்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடுஞ்
தானை படத்தனி யானை படத்திரள் சாயேனோ.

[போயிருக்கின்ற படைவீரர்களின் தலைவர்களாகிய இராமலக்மணர்களுக்கு ஒருவேளைப் போருக்காயினும் போதாத இச் சேனைகிடக்கட்டும். தேவர்களே வந்தாலும் வில்லென்னும் என்கைப் பெரிய மேகம் அம்புமழைபொழிந்து அவர் குடர்களைச் சூறையாடி ஒளிர்கின்ற வாளோடும் அத்தேவர் படையழியவும் யானைப்படைகள் அழியவும் யான் ஒருவனே தனியாய் எதிர்த்துச் சாய்க்கமாட்டேனோ]

என விளம்புமாற்றால் தான் தோற்பதுமில்லை, தான் தோற்றாலும் இராம இலக்குமணர்களுக்கு இச்சேனை யொரு பொருளுமாகாது என்று மாற்றிப் பின்னரும்,

நின்ற கொடைக்கையெ னன்ப னுடுக்க நெடுஞ்சீர
மன்று கொடுத்தவள் மைந்தர் பலத்தையெ னம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண் [டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ.

[நிலைபெற்ற ஈகை பொருந்திய கைகளையுடைய எனது அன்பனாகிய இராமன் உடுக்கும்படி அன்றைக்குச் சீரையைக் கொடுத்த கைகேசியின் மைந்தராகிய இப்பரதரது சேனையை என் அம்பினால் கொன்று குவித்த கொழுப்பு வழியும் பிணங்களின் குவியலை இரத்தக் கங்காநதி அடித்துக்கொண்டு ஓடி நெருங்கிய அலைகளையுடைய கடலில் நிறைத்து அதனைத் தூர்த்துவிடாதோ]

எனத் தன் வெற்றியை விளம்பலுற்றான். இத்துணையும் தான் ஒருவனே எதிர்த்துநின்று செய்வதென்னும் துணிவுடன் தோற்றுகின்றதே யன்றித் தன்புளிஞர் படைஞர் துணையைக் குகன் நாடியதாகத் தோன்றவில்லை. எனினும் வண்மையிற் சிறந்தவனாதலின்

ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளுங்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ

[தனக்குரிய நாட்டினைக் கொடுத்துவிட்டு வந்திருக்கும் என்நாயகனுக்கு இவர் நாம் வசிக்கும் இக்காட்டிலும் இடங்கொடுக்கலாகாதென்று படையெடுத்து வந்திருப்பதைப் பாருங்கள். இனி, ஆடுகின்ற கொடிகளையுடைய இந்தப் படையினை அழித்துத் தருமமூர்த்தியாகிய இராமனே ஆளும்படி இப்பூமியை வேட்டுவகுலமே கொடுத்ததெனும் புகழை அடையமாட்டீர்களோ]

என, வெல்வதெல்லாம் ஒன்றியாய்த்தானே யாயினும் அதன் பயனாய புகழினைத் தன்இனத்திற்கே சேர்த்துவிடுகின்ற செம்மையினால் வழங்குகின்றான். எக்குலம் பிறப்பினும் யாவரே யாயினும் அக்குலத்தில் மேலோர்க்கும் கீழோர்க்கும் உள்ள வேற்றுமை யிது. கீழ்மையோன் தன்குலம் ஈட்டியுள புகழைக்கொண்டு தன்னலம் தேடிக்கொள்வான். மேலோன் தான் வருந்தி முயன்று செய்பவைகளின் பயனையும் புகழையும் தன் குலத்திற்கே சேர்த்துவைப்பான்.

இன்னணம் இருமாந்துநின்ற இரும்பன மேனியன் குகனெனும் வீரவள்ளலை இப்பால் சுமந்திரன் பரதனுக்குக் குறித்துக் காட்டி

கங்கையிரு கரையுடையான்
கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற்
குயிர்த்துணைவ னுயர்தோளான்
வெங்கரியி னேறனையான்
விற்பிடித்த வேலையினன்
கொங்கலரு நறுந்தண்டார்க்
குகனென்னுங் குறியுடையான்

என அறிமுகம் செய்துவைத்து,

கற்காணுந் திண்மையான் கரைகாணாக் காதலான்
அற்காணிற் கண்டனைய வழகமைந்த மேனியான் [டி
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தா
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

என அவனுடைய குறிப்பையும் உணர்த்தினன். "உங்கள் குலத் தனிநாதற் குயிர்த்துணைவன்" என்றுமிடத்தில், சுமந்திரன், 'நாதன்' என்ற சொல்லால் தயரதனையே குறித்திருக்கவேண்டும். குகன் இராம



னைச் சந்தித்து நட்புக்கொள்வதன்முன் சுமந்திரன் தேரோடும் திரும்பிவிட்டானாதலின், இராமனை நினைத்து இயம்பியிருத்தல்இயலாது. ஆயினும் வான்மீகத்தில் அவன் கங்கைக்கரைவரையிற் சென்று குகனும் இராமனும் சந்தித்த அவ்விரவு அவர்களுடனே தங்கிப் பின் மீண்டுளன். ஆதலின் இவன் சிறிது நூல்மயங்கி அங்குக் கற்றதை இங்கு உணர்த்தினானென்றாலும் என்னலாம். இம்மயக்கத்தினால், சுமந்திரனுக்கேனும் அவனை மறக்கச்செய்த கம்பருக்கேனும் யாதுங் குறைநாண வொண்ணாது.

## கந்தபுராணமும் சங்க நூல்களும்.

[869-வது பக்கத் தொடர்ச்சி]

அருவி கெளிந்தோடுதற்கு, நிலத்தின்கண் பாம்பினது பாய்ந்து பரந்தோடுதலை யுவமையாகக் கவிஞர் குறித்திருப்பதனை முன்னர்க் கூறினோம். *நற்றிணை யென்னுஞ் சங்கநூலுள் இவ்வாறே வருணித்திருப்பதை யொருசிறிது ஈண்டு வரைந்திடுவாம். 'பல்பொறி யரவின் செல்புறங் கடுப்ப, யாற்றற லுணங்கிய நாட்பத வேனில்' என்பது நதியோடுதலைப்பற்றிய வருணனைத் தொடராம்.

[பல புள்ளிகளமைந்த பாம்பு ஓடும்போது, அதன் முதுகு தெளியுமாறுபோல், யாற்று நீர் நுணுகி யோடாநின்ற செவ்வியமைந்த இளவேனிற் பருவம்—என்பது, உரையாசிரியரேசரியாகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களது பொழிப்புரை]

பத்துப்பாட்டு, கொங்குவேண் மாக்கதை, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பரிபாடல், புறநானூறு முதலிய சங்கநூல்களெல்லாம் அருவி வீழ்ச்சியின் தன்மைக்குவமையாக இந்திரவில்லையும் மணிமாலையையும், ஒலிக்குவமையாக முழவொலியையும் குறித்திருக்க, நற்றிணை குறுந்தொகை யென்பவையவற்றுடன் அரவோடுகையையும் அணிபெறக் குறித்தமை மீண்டுக் கவனிக்கற் பாலதாம்.

இனி ஜீவகசிந்தாமணிக்கும் கந்தபுராணத்துக்கும் உள்ள ஒற்றுமைப் பகுதிகளிற் சில கூறுவாம். சுதஞ்சணனிட மிருந்து புறப்பட்டதுமுதல் கனகமாலையை மணம்புரிந்த வரையில் நிகழ்ந்தவை யனைத்தும், ஜீவகன் தன்தம்பியாகிய நந்தட்டனிட முரைத்துத் தாய் தந்தையரைக் காணப்பெற்றில்லாமைக்குப் பெரிதும் மனம் வருந்தியபோது, தம்பியாகிய நந்தட்டனும்கண்ணீர் விட்டழுதான். அப்போது ஜீவகன், அவன் கண்ணீரைத் துடைத்துத் தேற்றி, அடியில் வருமாறு கூறலாயினன். அது

திண்பொரு ளெய்த லாகும்
தெவ்வரைச் செருக்க லாகும்
நண்பொடு பெண்டிர் மக்கள்
யாவையு நண்ண லாகும்
ஒண்பொரு ளாவ தையா
உடன்பிறப் பாக்க லாகா
எம்பியை யீங்குப் பெற்றேன்
என்னெனக் கரிய தென்றான்.

(சிந்தாமணி, கனகமாலையாரிலம்பகம், செய்யுள் 204) என்பதே.

[ஐயனே, உறுதியாகியபொருளையடையலாம், பகைவரைக் கொன்றிடலாம். நண்பர், மனைவியர், மக்கள் முதலாக எவ்வகைய பொருள்களையும் பெறலாம்; (ஆனால்) செய்தற்கில்லாத சிறந்த பொருளாவது உடன்பிறப்பென்பதே; இத்தன்மையையாகிய நின்னை யிவ்விடத்தே பெற்றேன். எனக்கினி அரியதென்பது யாது? (அரியதொன்றுமில்லை என்றான்) என்பது, உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியாது உரையை யொட்டிய பொழிப்புரை.]

சிங்கமுகாசுரன் இறந்ததைக் கேட்டுச் சூரபன்மன் ஆற்றாது கூறியவற்று ளொன்றனை யீண்டுத் தருகின்றாம். அச்செய்யுள்,

பொன்னை நிலந்தன்னைப் புதல்வர்களை மங்கையரைப்
பின்னையுள பொருளை யெல்லாம் பெறலாகும்
என்னை யுடைய இளையோனே இப்பிறப்பில்
உன்னை யினிப்பெறுவ துண்டோ உரையாயே.

(கந்தபுராணம், சிங்கமுகன் வதைப்படலம், செய்.469)

[என்னைத் தமையனாக உடைய இளையோனே! பொருளையும் பூமியையும், மக்களையும், மனைவியரையும் மற்றுமுள்ள பெறுதற்கரிய பொருள்களனைத்தையும் பெறலாகும்: இனி, இப்பிறவியிலே (நீ மிறந்தபட்டபாகலின்) — உன்னைப் பெறுதலியலுமோ? சொல்வாயாக) என்பது, இதன் பொழிப்புரை.]

பகைவரைச் செருக்கவே அவரது நிலம் கைவசமாகப் பொருள்களிற் கிடைத்தன, 'தெவ்வரைச் செருக்கலாகும்' என்ற சிந்தாமணித் தொடரின் கருத்து, 'நிலந்தன்னைப்...பெறலாகும்' என்ற கந்தபுரா

* நற்றிணை-இஃது சங்கநூற்றொகையினில் எட்டுத்தொகையினுள் ஒன்றாகும். இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய 401 அகவல்களையுடையது. முதற்செய்யுள் பாரதம்பாடிய பெருந்தேவனாராலும் ஏனைய செய்யுட்கள் கபிலர் முதல் ஆலங்குடி வங்கனார் இறுதியாக உள்ள புலவர் பலராலும் இயற்றப்பட்டுள்ள.—அகம், புறம் என்ற இரண்டனுள் அகத்தின் பகுதிகளையே பொருளாக உடையது. பாக்கள் ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப் பெருமையு முடையனவை. இதனைத் தொகுப்பித்தோன் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி இதற்குப் பழைய உரை கிடைத்திலது. கும்பகோணம் டவுன் ஹைஸ்கூலில் தலைமைத் தமிழ்ப் புலவராயிருந்த பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்கள் இதற்குத் திருத்தமான அரிய உரையையெழுதியுள்ளார். பச்சோந்தியின் முதுகின்றபுறம் நிறம் மாறுபடுதலையுடையதெனக் குறுந்தொகைச் செய்யுளில் குறிப்பிட்டுள்ளதனை முன் எடுத்துக் காட்டினோம். அடியில்வரும் நற்றிணையடிகள் அதனை வலியுறுத்தும் வகையைக் காண்க. 'கானம் வெம்பிய வறங்கூர் கடத்திடை, வேனிலோதி நிறம் பெயர் முதுபோத்து' (காடுமுற்றும் வெப்பமடைந்தவறண் மிக்க சுரத்திலே வேனிலின்கண் மாறிமாறித் தன் நிறம் வேறுபடுகின்றமுதியஓந்திப்போத்து, என்பதுபொழிப்புரை. ஓதி — ஓந்திக் கொருபெயர். நிறம்பெயர் முதுபோத்தென்றதனாலே பச்சோந்தி யெனவுமாம் (உரையாசிரியரேசரியாகிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரவர்களது உரை). இந்நூலின்கணுள்ள அகப்பொருள் விடயங்களும் இயற்கை வருணனைகளும் உள்ளுறையும் கவினுள்ளத்தைக் கொள்ளைகொள்வனவாம்.

ணத் தொடரில் அடங்குவது நுணுகி நோக்கத்தக்கதாம். பகைவரைக் கோறலும் அவரது நிலத்தைக் கோடலுமென்ற இருவகைக் கருத்துக்களும் கந்த புராணத் தொடரி லமைதல் காண்க. இந்தச் செய்யுளகத்தே, சிந்தாமணிச் சொற்பொருள்கள் பெயர்த்தமைத்தாற் போன்று அற்றற் றொழுகுதல் கண்டு கொள்க.

இராமபிரான் அரணியவாசம் புரிந்தகாலை ஓர்நாள் இலக்குவனைநோக்கி நீர்வேட்கை மிகுதியி னிமித்தம் புனல்கொணரச் சொல்லினனாக, அவனும் தேடச் செல்ல, இரவு தொடங்கவே நள்ளிருளில் இலக்குவன் அயோமுகி யென்னும் அரக்கி கைப்பட்டுப் பின்ன ரவளை யங்கபங்கப்படுத்தி மீள்வதற்குள்ளாக, இலக்குவன் யாண்டுச் சென்றனனோ, எங்கேனும் அரக்கர் கைப்பட்டிறந்து விட்டானோ, இன்னும் மீண்டு வந்திலனேயெனப் பலபலப் பன்னி இராமன் இரங்குகையில், கம்பநாட்டாழ்வார், உடன்பிறப்புப் பெறலருங் குரைத்தாமென்ற பான்மையை இராமபிரான் வாக்கில் வைத்து வனப்புற மொழிந்துள்ளார். அவற்று ளிரண்டொன்றை யீண்டுக் குறிப்பிடுவாம்! அவை—

மூவகை யமரரும் உலகம் யாவையும்
மேவரும் பகையெனக் காக மேல்வரின்
ஏவரே கடப்பவ ரெம்பி நீயுளை
யாவதே வலியினி யாணும் வேண்டுமோ.

பிரிபவர் யாவரும் பிரிக பேரிடர்
வருவன யாவையும் வருக வார்கழற்
செருவலி வீரநிற் றீரு மல்லது
பருவா லென்வயிற் பயிலற் பாலதோ.

ஆரணிய காண்டம்-அயோமுகிப்படலம், செய்யுள்,
[88, 89.

என்னும் பாசுரங்களாம்.

[பிரமன் விஷ்ணு சிவபிரான் என்ற மூவகைத் தேவர்களும் மூவுலகத்திலுள்ளவர்களும் எனக்கு அணுகமுடியாத (மிக அதிகமான) பகைவர்களாக என்மேல் எதிர்த்துவந்தாலும் (அவர்களுள் என்னை) யாவர்தாம் வெல்லவல்லவர்? தம்பியே! நீ (யென்பக்கத்தில்) இருக்கிறாயென்ற இவ்வொன்றுமே (எனக்கு அவர்கள் யாவரையும்) வெல்லும் வல்லமையாயிருப்பது; இனிமேல் (உன்னையன்றி யென்றபடி) (எனக்குப் பிறிதொரு) காவலும் வேண்டுமோ? (வேண்டா என்றபடி).

[என்னை விட்டுப் பிரிகிறவர்கள் எல்லாரும் பிரியக் கடவர். எனக்கு வருகின்ற பெருந்துன்பங்கள் யாவும் வரக்கடவன; நீண்ட வீரக்கழலையும் போர்த்திறமையையுமுடைய வீரனே! (எனக்கு நேரிடும் துன்பம்) உன்னால் நீங்குமேயல்லாமல் என்னிடத்தில் தங்கி வருத்தும் இயல்புடையதோ? (அன்று என்றபடி) (உரையாசிரியச் சரபங்களாகிய வை. மு. சடகோபராமானுஜாசாரியார், சே. கிருஷ்ணமாசாரியார் முதலியவர்களெழுதியுள்ள பதவுரையையொட்டிய பொழிப்புரை.]

அயோமுகியை யுறுப்புக்கள் சிதைத்தஇலக்குவனை நோக்கி இராமன் கூறியவை யிவை.

இலக்குவன் மீடற்குமுன் அவனது பாணித்த வருகையைக் கண்ட முன்னவன் பெரிதுந் துக்கித்து, நல்வினைப் பகுதியுளதேல் இலக்குவனுக்குத் தமையனாய்ப் பிறக்கக்கூடுமானால் வந்து பிறக்கக்கடவேன் என்று சொல்லிக் கொடுமைத்தனமுடைய கூரிய வாளைக் கொண்டு தனது நிலைபெற்ற உயிரை இராமபிரான் நீக்கிக்கொள்ளத் தொடங்கி, அதற்குள்ளாக அரக்கியின் மரணத்தைப் புலப்படுத்துவது போன்ற பேரிரைச்சலைக் கேட்டு அச்செயலை யொழிந்தானென்பது வரலாறு. சகோதரன் பொருட்டு உயிரையும் விடத் தொடங்கி அடுத்த பிறவியிலும் அவ்வாறு முன்னவனாகப் பிறக்க இராமபிரான் நினைந்து நின்றனனென்றால், உடன்பிறப்பின் அருமையையும் பெருமையையும் என்னென்றுரைப்பது? இதனைக் குறித்த கம்பர் பாசுரத்தை யீண்டுக் காட்டி இவ்விடயத்தை நிறுத்துவாம்.

அறப்பா லுளதே லவன்முன் னவனாய்ப்
பிறப்பா னுறின்வந் துபிறக் கவெனா
மறப்பால் வடிவாள் கொடுமன் னுயிரைத்
துறப்பா னுறுகின்ற தொடர்ச்சி யின்வாய்

என்பதே.

(ஆரணியகாண்டம்-அயோமுகிப்படலம்செய்யுள்,77)

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்
கவனிக்க "சுத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்
குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்
டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.
REGD TRADE MARK
யுனைடெட் ஸோல் ஏஜண்ட்ஸ் சுன்ஸன், மதுரை.
டிப்போ:
பம்பாய்.
கல்கத்தா.
நஞ்சன்கூடு பேஸ்ட்
சாதாரணம்-பாக்கெட்



# ஆண்டாள்

## 4. ஆண்டாள் மதமும் சித்தாந்தமும்.

[865-வது பக்கத் தொடர்ச்சி]

### 4. ஆண்டாள் அத்துவித நிலை

அத்துவிதமென்பது தற்காலத்தில் பற்பல அபிப்பிராய பேதங்களால் பெரும் போராட்டத்தில் நிற்கும் ஒரு தொடர்மொழியாகும். ஜீவனே பரமன் என்பவரும் ஜீவன் வேறு என்பவரும் அத்துவைதிகளென்றே தம்மைக் கொள்கின்றார். அவர்களுள் முன்னவர் சங்கராசாரியர் நிலைநிறுத்திய வேதாந்தக் கட்சிக்காராம். ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் உபாதி பேதம் ஒன்றேயன்றி வேறு பேதமில்லை. அவ்வுபாதி நீங்கலாக பேதம் நிற்காதென்பது அவர் கொள்கை. கடாகாயத்திற்கு மகாகாயத்திற்கும் கடம் (Pot) ஒன்றே உபாதி பேதமாய் நிற்கின்றது. நிற்பினும் ஆகாயம் பிரிக்கக் கூடாத ஒருபொருள். கடத்தால் பிரிந்து தோன்றினும் அது ஒரு பிரிவன்று. அதுபோல் கூடஸ்த சைதன்னியமான ஜீவஸ்வரூபமும், பிரமசொரூபமான ஈச்வரனும் ஒன்றே என்பர். அவர், மாயையும் அதன் விகற்பமான அவித்தையும், மேகஜலமும் கடஜலமும் முறையே மகாகாயத்தையும் கடாகாயத்தையும் பிரதிபிம்பம் காட்டுவதுபோல், தம்மில் ஈச்வரனையும் ஜீவனையும் பிரதிபிம்பங் காட்டுமென்பர்.

இதுவே சங்கரவாதமாம். சைவர்களும் அத்துவிதமென்றே தமது சித்தாந்தத்தை மொழிவர். ஜீவர்கள் பளிங்கனைய சித்துக்கள். பாசத்தை அவாவியகாலை பாசப்பொருளாயும், பரத்தை அவாவிய காலத்தில் பரம்பொருளாயும் நிகழும். பாசத்தைநீங்கி அவ்வாறு பதியை அடைந்த பசுவானது (jiva) மறுபடியும் பாசத்தில் மீளாது. இதுவேதான் சாயுச்சிய நிலையான அத்துவித நிலையென்பர். இதைச் சுத்தாத்வைதமென்பர். இதன்றி வைணவர்களும் தங்கள் சித்தாந்தத்தை விசிட்டாத்துவித மென்பர். பாவத்தில் நின்று நீங்கிய ஜீவான்மாவானது பரமாத்துமாவை அடைந்து ஸ்ரீ வைகுண்டத்தில் நித்தியசூரியாய்ச் சாமீபமும் சாரூபமும் பெறும். இங்கு நிரதிசயானந்தத்தைப் பெற்ற ஜீவான்மாவின் சொரூபம்எல்லாவிஷயத்திலும் திருமால் சொரூபமேயாயினும் ஸ்ரீவத்ஸ மறு மாத்திரம் நித்தியசூரியின் மார்பில் காணப்படாது. இது வேபேதமாயினும் "தாராதமனக்காதற்றொண்டராய்" அச்சீவான்மாக்கள் பரமாத்மாவை தழுவிநிற்கும். அங்கு யாதொரு குறைவுமில்லை. இது துவிதமாகக் காணப்படினும்சிறந்த அத்துவிதநிலையாதலால் இதனை விசிட்டாத்துவிதநிலை யென்பர்.

இவ்விதமான பல அபிப்பிராய பேதங்களிடையே ஆண்டாள் வகித்த அத்துவிதநிலை யாதோவெனின், நமது வைணவ நண்பர்கள் விசிட்டாத்துவிவ மென்று அதனை அழைப்பர். ஆயினும் ஆண்டாள் பதிகங்களை உற்றுநோக்கின், இக்கட்சிகள் எதிலும் தன்னை அவர் சம்பந்தப்படுத்திக் கொள்ளவில்லை யென்றே வெளியாகின்றது. இவ்வம்மையார் மனோவாக்குக்கு எட்டாத மோட்ச நிலையைத் தமது திருநாவால் வெளியிடுவதற்குத் தக்க பாஷை உலகத்தில் இல்லையென்பதறிந்து, தமிழிலக்கணத்தில் மேலான பொருளிலக்கணத்தினது அகப்பொருட்டுறையில் விளக்குவதே முறையெனத் துணிந்தார். பரமனை யடைந்து ஜீவன் பெறும் பேரின்பத்திற்கு உலகத்தில் உவமையாகக் காட்டக்கூடியது எது என்று ஆராயப்புகுந்தால் உலகத்திலுள்ள எந்த இன்பமும் நிலையற்றதும், சிறிது நேரத்திலே மாறக்கூடியதுமா யிருப்பதால் உவமானம் ஒன்றும் பொருந்தாதென்பதை நன்குணர்ந்தார்.

பொருத்த முடைய நம்பியைப்
புறம்போல் உள்ளுங் கரியானைக்
கருத்தைப் பிழைத்து நின்றவக்
கருமா முகிலைக் கண்டீரோ
அருத்தித் தாரா கணங்களால்
ஆரப் பெருகு வானம்போல்
விருத்தம் பெரிதாய் வருவானை
விருந்தா வனத்தே கண்டோமே

14-வது திருமொழி 7.

ஆகையால் விருத்தம் பெரிதாய்க் கருத்தைப் பிழைத்து நிற்கும் கரிய திருமாலின் தன்மையையுணர்த்துவதின் நிமித்தம் மிகவும் அசாத்தியமான காரியமாதலாலும், இவ்வுலகத்தில் பேரின்பத்திற்குச் சமமாய் ஒப்படையத்தக்க யோக்கியதை பெற்ற இன்பம் உத்தமியான நாயகி தனது நாயகனுக்கு உடல் பொருள் ஆவி மூன்றும் சமர்ப்பித்து, அவன் இன்பமே தன்னின்பமாக அநுபவிக்கும் தன்னைமறந்த ஒப்பற்ற காதல் ஒன்றேயாதலாலும், அந்நிலையில் நாயகன்வேறு நாயகி வேறு என்று எண்ணக்கூடாத அத்துவிதநிலையாய் வேறு எண்ணம் ஒன்று மின்றி அவ்விருவரின் ஐக்கியமே எல்லா அண்ட சராசரங்களாய் வேறு பொருளின்றி நிற்பதாலும், அதையே தன் அத்துவிதக் கொள்கையாய் ஆண்டாள் தனது பதிகங்களில் விளக்குகின்றார்:— ரினீர்]

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவி
செய்ப்புரள வோடுந் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்றார்க்கு மெய்தாது நான்மறை
சொற்பொருளாய் நின்றாரென் மெய்ப்பொருளுங்
[கொண்டாரே.

11-வது திருமொழி 9.

இவ்வித அத்துவிதநிலை யாதொரு தர்க்கத்திற்கும் இடங்கொடாத சமரச நிலையாம். இவ்வாறே சைவ சமயாசாரிகள் பேரின்பநிலையை விளக்கியது அவர் திருமுறைகளிற் காணலாகும்:—

செய்ய மேனிவெண் ணீறணி வான்றனை
மைய லாகி மதிக்கில ளாரையுங்
கைகொள் வெண்மழு வன்கழிப் பாலையெம்
ஐய னேயறி வாளிவள் தன்மையே.

அப்பர்.

மறைக லந்தவொலி பாடலொ
டாடல ராகி மழுவேந்தி
இறைக லந்தின வெள்வளை
சோரவென் னுள்ளங் கவர்கள்வன்
கறைக லந்தகடி யார்பொழில்
நீடுயர் சோலைக் கதிர்சிந்த
பிறைக லந்தபிர மாபுர
மேவிய பெம்மா னிவனன்றே

சம்பந்தர்.

ஆகையால் இவ்வம்மையாரது அத்துவிதம் எம்மதத்தோர்க்கும் எத்தத்துவ வாதிகளுக்கும் சம்மதமான அத்துவித சித்தாந்தமாகும்.

# யாப்பிலக்கணம்

## செய்யுள்—கலிப்பா

[876-வது பக்கத் தொடர்ச்சி]

### கோச்சகக் கலி.

**வ**ண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்குரிய உறுப்புக்களெல்லாம் இருந்தும், அவை தத்தமிற்குரிய அளவில் மிக்குங் குறைந்தும் வரப்பெற்ற கொச்சகக் கலிப்பாக்கள் இயல்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாக்கள் ஆகுமாறு சென்றவாரங் கண்டோம். வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவிற்கு இயல்பான உறுப்புக்களே மேற்சொன்னவாறு மயங்கி வந்தமையால் இயன் மயங்கிசைக் கொச்சகம் எனப் பெயராயிற்று. எனினும், அவ்வுறுப்புக்கள் சில இன்றி அதற்கு மாறாக வெண்பா ஆசிரியப்பாக்களுக்குரிய அயலடிகளும் விரவிவருதலுங்கூடும். அவ்வாறு வருமாயின் அது அயன்மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா எனப்படும். அதற்கோர் உதாரணங் காண்போம்.

### 10. அயன் மயங்கிசைக் கொச்சகம்.

தளிபெறு தண்புலத்துத் தலைப்பெயற் கரும்பின்று
முளிமுதற் பொதுளிய முட்புறப் பிடவமுங்
களிபட்டா னிலையேபோற் றடவுபு துடுப்பீன்று
ஞெலிபுட னிரைத்த ஞெகிழிதழ்க் கோடலு
மணிபுரை யுருவின காயாவும் பிறவு
மணிகொள மலைந்த கண்ணியர் தொகுபுடன்
மாறெதிர் கொண்டதம் மைந்துட னிறுமார்
சீறரு முன்பினேன் கணிச்சிபோற் கோடேசி
யேறுதொழூஉப் புகுந்தன ரியைபுட னொருங்கு ;

அவ்வழி,

முழக்கென விடியென முன்சமத் தார்ப்ப
வழக்குமாறு கொண்டு வருபுவரு பீண்டி
நறையொடு துகளெழ நல்லவ ரணிநிற்பத்
துறையு மாலமுந் தொல்வலி மராஅமு
முறையுளி பராஅய்ப் பயந்தனர் தொழூஉ ;

மேற்பாட் டுலண்டி னிறனெக்கும் புன்குருக்க
ணேக்கஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாக்குத்திக்
கோட்டிடைக் கொண்டு குலைப்பதன் றோற்றங்கா
ணஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியா
னெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவட்டன்
வஞ்சினம் வாய்த்தானும் போன்ம் ;
சுடர்விரிந் தன்ன சுரிநெற்றிக் காரி
விடரியங் கண்ணிப் பொதுவனைச் சாடிக்
குடர்சொரியக் குத்திக் குலைப்பதன் றோற்றங்காண்
படரணி யந்திப் பசுங்கட் கடவு
ளிடரிய வேற்றுருமை நெஞ்சிடந் திட்டுக்
குடர்கூளிக் கார்த்துவான் போன்ம் ;
செவிமறை நேர்மின்னு நுண்பொறி வெள்ளைக்
கதனஞ்சான் பாய்ந்த பொதுவனைச் சாடி
நுதிநுனைக் கோட்டாற் குலைப்பதன் றோற்றங்காண்
ஆரிரு ளென்னு னருங்கங்குல் வந்துதன்
றுளிற் கடந்தட்டுத் தந்தையைக் கொன்றானைத்
தோளிற் றிருகுவான் போன்ம்;

எனவாங்கு,

அணிமாலை கேள்வற் றரூஉமா ராயன்
மணிமாலை யூதுங் குழல்;

கடாகக் களிற்றினுங் கண்ணஞ்சா வேற்றை
விடாஅதுநீ கொள்குவை யாயிற் படாஅவை
யீன்றன வாயமக டோள்;

பகலிடக் கண்ணியன் பைதற் குழலன்
சுவன்மிசைக் கோலசைத்த கைய னயலது
கொல்லேறு சாட விருந்தார்க்கெம் பல்லிருங்
கூந்த லணைகொடுப்பேம் யாம்;

கோளாள ரென்னொப்பா ரில்லென நம்மானுட்
டாளாண்மை கூறும் பொதுவ னமக்கொருநாட்
கேளாள னாகாமை யில்லை யவற்கண்டு
வேளாண்மை செய்தன கண் ;

ஆங்கு,

ஏறும் வருந்தின வாயரும் புண்கூர்ந்தார்
நாறிருங் கூந்தற் பொதுமகளி ரெல்லாரு
முல்லையந் தண்பொழில் புக்கார் பொதுவரோ
டெல்லாம் புணர்குறிக் கொண்டு.

இதனில் தனிச்சொல் இடை பெற்ற தரவுபோன்ற ஆசிரியங்கள் இரண்டும், தாழிசை போன்று வரும் வெண்பாக்களும், ஈற்றில் வெள்ளைச் சுரிதகமும் பலவாக மயங்கிவந்திருத்தலால் இது அயன்மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள்ளடங்கும்.

இதுகாறுங் கூறப்பெற்ற பத்துவகைக் கொச்சகக் கலிப்பாக்களிலும், உறுப்புக்கள் எவ்வாறு மாறினும் மயங்கினும் தரவேனுந் தாழிசையேனும், பெரும்பான்மை அவ்விரண்டும், இருந்தே தீர்கின்றன. ஒருசாரார் எல்லாக் கொச்சகக் கலிப்பாக்களையும் ஒருபோகு என வழங்குவார். ஆயினும், முன்சொன்ன பத்துவகைகளைக் கொச்சகங்களென்றும், பெரும்பாலும் தனிச்சொல்லுஞ் சுரிதகமுமிருக்க, தரவேனுந் தாழிசையேனும், அம்போதரங்க அராகவுறுப்புக்களேனும், நீங்கி வருவனவற்றை ஒருபோகு என அழைக்கலாம்.

### 11. தாழிசை யொருபோகு.

தாழிசை

1. ஆளாய் மதுரகவி யாதரித்த பூங்கமலத்
தாளான் மகிழ்மாறன் றந்த தமிழ் மறைப்பாக்
கேளா தவரே பிருசெவியுங் கெட்டாரே.
2. மாதர் முலைப்பா லருந்தா வரோதயனுந்
தாதார் மகிழ்மாறன் றந்த தமிழ்மறைப்பா
வோதா தவரே யுரையறியா வூமர்களே. [கூர்
3. புள்ளிப் பொறிவண் டிமிழ்ப்பூம் பொழிற்குரு
வள்ளல் மகிழ்மாறன் வடித்த தமிழ்மறைப்பா
வுள்ளத் துணரா தவரே யுணர்விலரே.

தனிச்சொல்

புலவீர்

சுரிதகம்

பழுதற மாறன் பகர்தமிழ் நையா
லெழுதிய வேட்டி னிணமலர் சூட்டித்
தொழுதநன் வாசந் துற்றியு மவ்வேட்டைச்
செறிப்பதே சென்னி மற்றைய
பொறித்தலை பெண்ணைப் புனைபொய்த் தலையே.

இதனில், தரவின்றி, மூன்று தாழிசைகளும். தனிச் சொல்லுஞ் சுரிதகமும் வந்திருக்கின்றன. இது தாழிசை யொருபோகு எனப்பெறும். மற்றும், தனிச்சொல்லும் சுரிதகமுமின்றித் தாழிசை மாத்திரம் நின்றும் தாழிசை ஒருபோகு ஆதல் கூடும். ஜீவக சிந்தாமணி, காந்தருவதத்தையாரிலம்பகத்தில் இதற்கு உதாரணம் காணலாம்.

தாழிசை.

1. புன்காஞ்சித் தாதுதன் புறம்புதையக் கிளியெனக்கண்
டன்புகொண் மடப்பெடையலம்வலத்தாங் ககல்வதனை
யென்புருகு குரலழைஇ யிருஞ்சிறகர் குலைத்துகுத்துத்
தன்பெடையைக் குயிறழுவத் தலைவந்த திளவேனில்.
2. தண்காஞ்சித் தாதாடித் தன்னிறங் கரந்ததனைக்
கண்டானு மடப்பெடை கிளியெனப்போய்க் கையகல
நுண்டுவி யிளஞ்சேவ னேக்கோடு விளியிற்றித்
தன்சிறகாற் பெடைதழுவத் தலைவந்த திளவேனில்.
3. குறத்தாட் குயிற்சேவல் கொழுங்காஞ்சித் தாதாடி
வெறுத்தாங்கே மடப்பெடை விழைவகன்று கடப்பதனை
மறுத்தாங்கே சிறகுளர்த்து மகிழ்வானுக் கொளத்தேற்றி
யறுப்பினு லடிபணியத் தலைவந்த திளவேனில்.

இவைமூன்றும் ஒருபொருள்மேல் அடுக்கிவந்து, வேறு உறுப்புக்கள் இல்லாமல் நிற்கின்றமையால் தாழிசை ஒருபோகு ஆகும்.



## வர்த்தமானம்

இந்திய சிவில்சர்விஸ் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தில் 100-க்கு 10 வீதம் குறைப்பதென்று பார்லிமெண்டார் நிச்சயம்செய்து மசோதாவொன்று செய்திருக்கின்றனர். அது சட்டமாய்விடும். அச்சட்டம் 1931-வது ஆண்டு டிசம்பர் முதல் 1933-வது வருட ஆரம்பவரையில் அமுலிலிருக்கும். பின்னால் அவர்களுக்குப் பழைய சம்பளம் கொடுக்கப்படும்.

***

ஊழியன்:-இரங்கூனில் புதியதாய் வெளிவந்துள்ள ஊழியன் என்னும் வாரப்பதிப்புத் தமிழ்ப்பத்திரிகை வரப்பெற்றோம்.இப்பத்திரிகை ஞாயிறுதோறும்வெளிவருவதாகும். சமுகபொருளாதார அரசியல்முன்னேற்றத்தைக் குறிக்கொண்டுளது இப்பத்திரிகை. இதன் ஆசிரியர் ஸ்ரீமான் கொ. நா. சுப்பையா நாயுடு. இரங்கோன், 30-வது தெரு, 230 நம்பர் கட்டிடத்தில் உள்ள ஊழியன் அச்சுக்கூடத்தில் அச்சியற்றப்பட்டு வெளிவருகின்றது. இதன் வருட சந்தா ரூ 5. வெளிநாடுகளுக்கு ரூ 6. வேண்டுவோர் ஊழியன் காரியாலயத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

***

வட்டமேஜை மகாநாடு:-ஸ்ரீமான் கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் வட்டமேஜை மஹாநாட்டின் முடிவு பற்றித் தமது அபிப்பிராயத்தைக் கூறுகையில், தமக்கு மஹாநாட்டு நடவடிக்கை திருப்திதருவதாக இருக்கவில்லை என்று சொல்லியுள்ளார். "இதுவரை வட்டமேஜை மஹாநாட்டில் நடந்த பேச்சுக்களினின்று, மஹாண சுயவாட்சி கொடுக்கவே பிரிட்டிஷார் சம்மதித்துள்ளார் என்று தெரிகின்றது. மத்திய அரசாங்கத்தில் பொறுப்பாட்சி ஏற்படுத்தும் எண்ணம் பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே மஹாநாடு இந்தியமிதவாதிகளுக்கும் திருப்தியைத்தராது" என்று அபிப்பிராயப் படுகின்றார்.

***

கடல் யாத்திரை:—இது இரங்கோன் நவீன கதா புத்தகசாலையார் வெளியீடு. பர்மாவில் வசிக்கும் தமிழர்களுக்குத் தமிழ்நூல்களைப் படிக்கும் ஊக்கம் ஏற்பட முயன்றவரும், பல நாவல் நூல்களின் ஆசிரியருமான காலஞ்சென்ற ஸ்ரீமான் ச. தா. மூர்த்தி முதலியார் கடல்யாத்திரை என்னும் இச்சிறுநூலின் ஆசிரியராவர். 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடு' என்னும் ஔவையார் கூறிய வாசகத்திற்கு ஆசிரியர் விரிவுரை எழுதியுள்ளார். ஔவையார் கூறிய பொருள் ரூபாய் அணா பைசா அன்றென்றும், திரைகடல் ஓடி மாந்தர் ஞானப்பொருள் தேடவேண்டுமென்பதே அவ்வம்மையார் கருத்தென்றும் கூறுகின்றார்.

## மதிப்புரை

காதம்பரி:— ஆசிரியர் - பண்டிட், மே. துரைசாமி ஐயங்கார். சென்னை, வேப்பேரி, வைத்திய கலாநிதி ஆபீஸில் பிரசுரிக்கப்பட்டது.

உலகத்தில் நிரந்தரம் நிலைநிற்கவல்ல நூல்கள் சில. அவற்றுள் வடமொழியில் பட்டபாணன் எழுதிய காதம்பரியு மொன்று. இத்தகைய நூல்கள் எம்மொழியிலெழுதப்பெற்றிருப்பினும் அவை எல்லா மொழியினும், அறிவும் இலக்கியத்தின்பால் ஆசையும் உடையோர்க்கு உரியவை. ஆதலின், அவ்வரிய பெரிய நூல்களை அவ்வப்போது பிறபாஷைகளில் மொழிபெயர்த்துத் தருகின்றவர்கள் உதவி பெரிது செய்தவராகின்றார்.

பற்பல மருத்துவ நூல்களையும், காளிதாசனது மேகசந்தேசத்தையும் வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவரும், வடமொழியில் "த்ரிதோஷ தத்துவம்" முதலிய நூல்களை இயற்றியவரும் ஆயுர்வேத பண்டிதருமான, ஸ்ரீமான் மே. துரைஸ்வாமி ஐயங்கார், எ. வி. எஸ். அவர்கள், காதம்பரியை இருபதாண்டுகளுக்கு முன்னரே தமிழில் மொழி பெயர்த்துப் பிரசுரஞ்செய்துளார். அதனைச் சுருக்கிச் சீர்திருத்திய மூன்றும் பதிப்பு இப்பொழுது எம்பார்வைக்கு வந்திருக்கின்றது. கதையைப்பற்றியேனும் அதனை ஆக்கிய பட்டபாணரைப் பற்றியேனும் யாமொன்று முரைக்க வேண்டுவதில்லை.

இம் மொழிபெயர்ப்புப் பதிப்பின் சிறப்புக்கள் பல. நூன்முகத்திலடங்கிய விடயங்கள் மிகவும் பாராட்டத்தக்கன. பட்டபாணனது வரலாறும், அவர் வரைந்த கதையின் ஆதாரம் நுட்பங்கள் முதலியவைகளும், இக்கதையில் விளக்கப் பெற்றுள நீதிதருமங்களும், மற்றும் இந்நூலின் சார்பான சில அவசியமான விடயங்களும் நூன்முகத்தில் கூறப் பெற்றிருக்கும் முறை கொண்டாடற்பாலது. இவைகளன்றி, கதையினைச் சுருக்கமாய்த் தொகுத்து முதலில் குறிக்கப்பெற்றிருக்கும் பாகம், கதையின் தொடர்ச்சியைச் செவ்விதின் ஓர்ந்துகொள்வதற்கு மிகவும் உதவியாயிருக்கும். இப்பதிப்பின் இறுதியில், கதையில் வந்துள்ள பாத்திரங்களைப்பற்றியும் உபகதைகளைப் பற்றியும் வரைந்துள்ள குறிப்புக்களும் உபயோகமானவைகளே.

மாணுக்கருக்கும் பயன்படுமாறு, முதனூலின்கண் வந்துள்ள சில நீண்ட வர்ணனைப் பாகங்களையும் சிருங்கார இரஸம் மிகுந்த இடங்களையும் இப்பதிப்பில் சேர்க்கவில்லை யென்று மொழிபெயர்ப்பாசிரியர் தெரிவிக்கின்றார். இந்நூலை எல்லோரும் வாங்கிப் படித்து இன்புறுவார்களென்று நம்புகின்றோம்.

விலை ரூ. 1-8-0. வேண்டுவோர், வைத்தியகலாநிதி ஆபீஸ், வேப்பேரி, சென்னை, என்னும் விலாசத்திற் கெழுதிப் பெற்[illegible]

188943

KALANILAYAM.
REG. NO.: M 2324.

—:வைத்திய ரத்ன:—

பண்டிட். D. கோபாலாசார்லு அவர்களின்

ESTD 1898

"ஜீவாமிருதம்"




பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, மறதி, அயர்வு, வீர்யக்குறைவு, இவைகளைப் போக்கி, தேகபலம், ஞாபகசக்தி, வீர்யவிர்த்தி, இவைகளை அளிப்பதில் இணையற்றது.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். விலை ரூ 3-4-0

ஆயுர்வேதாஸ்ரமம்

தபால் பெட்டி. 287. மதருஸ்.

கேடலாக் இனாம்

## அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ 18—0—0

காரனேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

# ASOKA SALT

## அசோகா சால்ட்.

(ரிஜிஸ்டர்ட்.)

## (அசோகா—உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வராமல் தடுப்பதற்கும் அசோக—உப்பு ஓர் அரு மருந்து.

உணவை நன்ருகச் சீரணஞ் செய்து, யாதொரு வருத்தமுமின்றி நாள்தோறும் மலத்தைக் கழிக்கும் சிறந்த குணமுள்ளது.

அசோகா—உப்பு ஜலத்தில் போட்டால் பால் பொங்குவதுபோலவே பொங்கி வரும்.

விலை ரூ. 1—8—0. தபால் செலவு வேறு.

அசோகா கம்பெனி
லிமிடெட்,
சென்னை.

ஏற்படுத்தியது] நாஷனல் [1906.

## இன்ஷுரென்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்ஸ், 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

இந்தியர்களால் நடத்தப்படும் கம்பனிகளில் தலையாயது

1930 வருஷாந்திர ரிபோர்டின் சுருக்கம்.

| | |
|---|---|
| 1930 வருடம் நிறைவேறிய புது பிஸினெஸ் | ரூ. 1,18,55,069. |
| 1930 வருடத்தில் அதிகமான லைப் அஸ்யூரன்ஸ் பண்டு | 11,51,818. |
| பிரீமியம் வரும்படி | 30,88,986. |
| 1930 வருடத்தில் கிடைத்த வட்டி வரும்படி | 7,47,608. |

மொத்த அஸ்ஸெட், ரூ. 1,65,00,000க்கு அதிகம்

1930 வருடத்தில் நடை முதலிலிருக்கும் லைப் அஸ்யூரன்ஸின் மொத்தம் 6,55,70,916.

பிரீமியம் மிகக்குறைவு, பாலீஸி நிபந்தனைகள் மிகவும் தாராளமானவை. எல்லாவித லைப் அஸ்யூரன்ஸ்களும் எடுத்துக் கொள்ளப்படும்.

எஜென்ஸி எடுத்துக்கொள்வது உங்களுக்குஇலாபமாகும்

113, அரமனைக்காரன் தெரு, சென்னை. } T. அனந்தாசாரி, B. A. செக்ரடரி, மதராஸ் பிராஞ்ச்.

R. G. தாஸ் & கம்பெனி, மானேஜர்கள்.

நாஷனல் பையர் அண்டு ஜனரல் இன்ஷுரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

ஹெட் ஆபீஸ்:—நாஷனல் இன்ஷுரன்ஸ் பில்டிங்., 7, கவுன்ஸில் ஹவுஸ் தெரு, கல்கத்தா.

தீ, மோட்டார்கார் மோட்டார் ஸைகில் இன்ஷுரன்ஸ்.

கேட்போருக்கு விவரங்கள் அனுப்பப்படும்.

— திருக்குறள் —

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை அணு 12. வி. பி. செலவு வேறு.

கலாநிலயம், புரசை, சென்னை.

## :: உத்தம தோழன் ::

அறியாமையினுல் ஆபத்தில் அகப்பட்டு அல்லல்படும் காலத்தில் உங்கள் இடுக்கண்களைப் போக்கி இராஜவழியென்னும் ஆரோக்கிய சம்பத்தில் வைப்பது எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்தான்

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1. விவரம் வேண்டுவோர் எங்கள்

காம சாஸ்திரம்

என்னும் புஸ்தகத்தை வரவழைத்து வாசியுங்கள். இனாமாகவும் தபாற் செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஒளஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)